பிள்ளைப் பிராயத்திலே

தங்கம்மாள் பாரதி

ஓம்கார நூலகம்
புதுக்கோட்டை

ஓம்கார நூலக வெளியீடுகள்

ரு. அ.

அமரன் கதை 0 14

— தங்கம்மாள் பாரதி

அமர கவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கை வரலாறு சுவையுடையது; பல ரஸமான சம்பவங்கள் நிறைந்தது. வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை அழகான முறையில், தெளிவான நடையில் கவிஞரின் அருமைத் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதியே கதையாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

திருப்புகழ்ச் சாமியார் (சிறு கதைகள்) 2 8

— "சோமு"

"..............ஒவ்வொரு கதையிலும் சிறு கதைப் பண்பும், விறுவிறுப்பும் நிறைந்திருக்கின்றன. படிப்பவர் மனம் தெவிட்டாத ரசம் கதைகளில் இருக்கிறது..................வார்த்தைகளின் ஓட்டமும், ஜோடிப்பும், வர்ணனைகளும் கதைப் போக்குக்கு உதவும் பாணியில் அமைந்துள்ளன.........". கலைமகள்

பண்டிகைப் பரிசு முதலிய கதைகள் 1 8

— வி. ஜி. ஸ்ரீநிவாஸன், B.A., L.T.

இந்தத் தொகுப்பில் பத்துச் சிறு கதைகள் அடங்கியுள்ளன; ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு சுவை கொடுப்பது! அந்தனை கதைகளும் வாழ்க்கையோடு ஒட்டியவை. — — —

"This volume of ten short stories makes diverting reading. The author has not ventured outside everyday life to hunt for background material and the stories consequently have gained in their appeal". *HINDU*

பிள்ளைப் பிராயத்திலே

தங்கம்மாள் பாரதி

ஓம்கார நூலகம்
புதுக்கோட்டை

பதிப்புரிமை
முதற் பதிப்பு: விய, பங்குனி

விலை ரூ. 1-6.

PRINTED AT THE CITY PRESS, MADURA ROAD, TRICHINOPOLY
FOR OMKARA NULAHAM, PUDUKKOTTAI
COPIES — 1000

பதிப்புரை

"பிள்ளைப் பிராயத்திலே" என்ற இந்த நூலில், தமது பாலைப் பிராயத்திலிருந்து கன்னிப் பருவத் துவக்கம் வரை தாம் அனுபவித்து அறிந்த பல்வேறு விஷயங்களை வெகுருசிகரமான முறையிலே தருகிறார் ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதியார்.

கடைய வாசம், காசி வாசம், புதுவை வாசம், யாத்திரா மார்க்கம் இவற்றின் போது ஏற்பட்ட பல சுவை தரும் இனிய சம்பவங்களை நினைவு கூறுகிறார் இதன் ஆசிரியை.

புதுக்கோட்டை
விய, பங்குனி உ௬

ஓம்கார நூலகம்.

முகவுரை

தமிழ் நாட்டு சகோதர, சகோதரிகளே!

ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை எனது பிள்ளைப் பிராயத்தில் நடந்த விஷயங்களை எழுதியிருக்கிறேன். தந்தையார் ஓரிடத்தில், "தன்னை அறிந்து கொள்வதற்கும், திருத்திக் கொள்வதற்கும் மனமாகிய குரங்கு யோசிப்பதை அவ்வப்பொழுது எழுதிக் கொண்டு வந்தால், நாளடைவில் சுலபமாகிவிடும்" என்று கூறியுள்ளார். அதுபோலவே, நானும் எனது சென்ற நாட்களில் கவனம் செலுத்தலானேன். "எங்கிருந்து வந்தேன்?" "எங்கு போகப் போகிறேன்" இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைப்பது சிரமம். மனிதன், தன்னை மற்றவர்க்கு உரியவனாக ஆக்குவதற்கு, தன்னை யறிவதே முதற்படி. தன்னை யறிவதற்கு, தன் செய்கைகளை ஞாபகப்படுத்திக் கொள்வதும் அவசியம். அப்படி தன்னைப் பற்றி ஆராயப் புகுந்த இடத்திலே தோன்றியவை தான் இந்தக் கட்டுரைகள்.

இந்தக் கட்டுரைகள், எங்கள் குடும்பத்து நண்பனாகிய "சுதேச மித்திர"னில் வெளிவந்தவையே. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுதல் இயல்பு. எனது பிள்ளைப் பிராயத்து நிகழ்ச்சிகள், "அமரகவி பாரதியா"ரின் அருகிலேயே நடந்தன வாதலால், தமிழர்கள் இதை விரும்பிப் படிக்க முன்வருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான். தமிழர், தன்னை உணர்ந்து, தாழ்வு நீங்கி, உயர்நிலை பெற, அன்னை பராசக்தியை வேண்டுகிறேன்.

கைலாசபுரம்
5—4—47

தங்கம்மாள் பாரதி.

பொருளடக்கம்

முன்னுரை

உலகத்தில் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வில் "சாவதா, இருப்பதா?" என்ற கேள்வி தோன்றும் சமயம் ஏற்படுவதுண்டு. கூழுக்கு உப்பு போதாதென்று அழுவோர் பலர். பாலுக்கு சர்க்கரை போதாதென்று அழுவோர் சிலர். அவரவருக்கு தத்தம் கஷ்டங்களே பெரியதாகத் தோன்றுதல் இயல்பு. ஆனால், கஷ்டம் என்பதே தோன்ருத காலம் பிள்ளைப் பிராயத்தில் தான். மனிதரை இன்புறுத்தும் காலம் பிள்ளைப் பிராயமே. கவலைகளாகிய விஷப்பூச்சிகள் மனிதரின் மனத்தை இளமைப் பருவத்தில் அணுகுவதில்லை. தந்தையார் பிள்ளைப் பிராயத்தை மிகவும் ரசிப்பார். புதுவையில் எனக்கு 12, 13 வயதில் தந்தையார் "பிள்ளைப் பிராயத்தை யிழந்திரே, பின்னுமங்கிலே பெற வேண்டீரோ" என்று மிகமிக உற்சாகமாகப் பாடும்போது என் மனம் திடுக்குறும். "ஐயோ, நம்மை விட்டுப் பிள்ளைப் பிராயம் பிரிந்து கொண்டிருக்கிறதே" என்று. ஒரு சமயம் ஒரு நண்பர் தந்தையாரிடம் "தங்களுக்கு வயதென்னவிருக்கும்?" என்ற கேள்வியைக் கேட்டார். தந்தை உடனே "ஐந்து வயது" என்ருர். நண்பர் திடுக்கிட்டுப் போனுர்.

பிறகு சமாளித்துக் கொண்டு "நாற்பத்தைந்து வயதா?" என்று மறுபடியும் கேட்டார், "இல்லை ஸ்வாமி, ஐந்தே வயது தான்" என்று அழுத்திச் சொன்னுர். நண்பர் முகத்தில் வியப்பும் பரிகாசமும் தென்பட்டன. அந்த சமயம் என் தாயார் அங்கு வரவே மறுபடியும் தந்தையார் "ஸ்வாமி, எனக்கு ஐந்து வயது, அவளுக்கு இரண்டரை வயது என்று தாயாரைச் சுட்டிக்காட்டினுர். அப்போது நண்பர் "ஸ்வாமி, தங்கள் வயது சரிதான், எனக்கென்ன வயதிருக்கலாம் சொல்லுங்கள்" என்ருர்.

"தங்களுக்கு எழுபத்தைந்து வயதிருக்கலாம்" எனவும் மேடி நண்பருக்குச் சிரிப்பும், கோபமும் கலந்து வந்தது. ஏனென்றால் அவர் முப்பது வயதைக்கூட எட்டியிராத மனிதர். "தாங்கள் கூறுவது விளங்கவில்லையே" என்றார். தந்தையார் கூறலானார்: "தம்பி, கோபித்துக் கொள்ளா தீர். பதறின காரியம் சிதறும் என்பது பெரியார் வாக்கு. இந்த ஆங்கிலப் படிப்பு தங்கள் அகக் கண்ணையும், புறக் கண்ணையும் குருடாக்கி விட்டன. இருபத்திரெண்டு வயதில் ஒட்டு வில்லையைப்போல் கனங் கொண்ட கண்ணாடிகள் இரண்டு அணிந்திருக்கிறீர், எப்போதும் பார்வைக்கு ஒன்று, படிப்பதற்கு இன்னொன்று என்று. தமது முதுகோ சாய்மானம் இல்லாமல் உட்கார மறுக்கிறது; கால்களோ தள்ளாடுகின்றன. சரீரத்தில் இத்தனை பலவீனங்கள் ஏற்பட வேண்டுமானால் குறைந்த பக்ஷம் எழுபத்தைந்து வயதுக்கு மேல் தான் எதிர் பார்க்கலாம்." இந்த உண்மையான வார்த்தைகளைக் கேட்டு மேற்படி நண்பர் வெட்கிப் போனார். "தாங்கள் சொல்லுவது முற்றிலும் சரி. நானும் இங்கு வந்தது முதல் கவனிக்கிறேன். தாங்கள் ஐந்து வயதுப் பாலகனைப்போல் உல்லாசமாக உலாவுவதும், தங்கள் பத்தினியார் சிறு குழந்தையைப் போல் ஓடி ஓடித் தங்களுக்குப் பணிவிடை செய்வதும் ஆச்சரியமாய்த் தானிருக்கிறது. இனிமேல் இன்றைய தினத்திலிருந்து நானும் தங்களைப் போல் குழந்தையாக மாற முயற்சி செய்வேன்" என்றார். தந்தையார் நகைத்து "தம்பி, குழந்தையைப்போலாகுங்கள் என்றால், தாய்ப் பால் குடிக்கவும், முரண்டு பண்ணி அழவும் ஆரம்பியுங்கள் என்று அர்த்தமல்ல. உள்ளத்தை குழந்தையினது போலாக்குங்கள் என்பது தான் கருத்து" என்றார். நண்பர் விடை பெற்றுச் சென்றார்.

எப்படிப் பார்த்தாலும் பிள்ளைப் பிராயம் சிறந்தது தான். எல்லாக் கலைகளையும் கற்றுணர இளம் பிராயமே தேவையாயிருக்கிறது. கவலையற்ற மனத்தில், கல்வி கலை யாவும் பசுமரத்தாணி எனப் பதிந்து விடுகின்றன.

தோழமை கொள்ளுதலும் பால்யத்திலே தான் எளிதாயிருக்கிறது. இவன் எனது பால்ய நண்பன் என்று நாம் ஒவ்வொருவரும் எத்தனைகளிப்புடனும், பெருமையுடனும் சொல்லுகிறோம். பெரியவர்களானபின் ஏற்படும் நட்பில் தன்னலமும், சந்தேகமும் எற்படலாம்; இளவயதில் ஜனித்த அன்பு சிரேஷ்டமானது. இப்படி எண்ணும் போது ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. தந்தையார் நாட்டுப் பாட்டு எத்தனையோ இயற்றியுள்ளார். அதில்,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே"

என்று ஆரம்பிக்கும் பாட்டைப் பாருங்கள். அதில் அவர் குழந்தையுள்ளம் கொம்மாள மிடுவதைக் காணலாம். அந்தக் கற்பனை வேகம், தன் தாயையும் (பாரதியாருக்குத் தான் வேறு, தேசம் வேறு என்ற சிந்தனையே யிராத படியால்) நம் எல்லோருடைய அன்னையரையும் தான் செல்லுகிறார். அன்னைமழலை கூறி, கன்னியராகி நிலவினில் ஆடியது கவியின் உள்ளத்தை எவ்விதம் கொள்ளை கொள்கிறது பாருங்கள். அவர்கள்,-அதாவது அன்னையும், தோழியரும்-எத்தனை விளையாட்டு விளையாடினர். காலையில் அவர் பொன்னுடலின் புற நீரில் விளையாடுதல், இரவில் நிலவினில் ஆடுதல்-எப்போதும் இந்த நிலையுண்டா?-இல்லை. மங்கைப்பருவம் வந்ததும் கிருக தர்மம் நடத்த வேண்டுமே!

இழந்த பிள்ளைப் பிராயத்தை (உள்ளத்தை) மறுபடி பெற வேண்டுமானால் தகுந்த திட சித்தமும், பழக்கமும் வேண்டும். ஒவ்வொருவருக்கும் தமது இளமை நாட்களை எண்ணிப் பார்ப்பதிலும் கூட ஒரு இன்பம் ஏற்படுகிறது. அவரவர் மனத்தின் தன்மைக்கு ஏற்ப அந்த இன்பத்தை அனுபவிக்கிறோம். எனது பிள்ளைப் பிராயத்தில் தந்தையாருடன் நான் கழித்த நாட்களைப் போல் சுகமான நாட்கள் நான் இன்னும் பார்க்கவில்லை. நாலு புறமும் போலீஸ் பாராவும், சௌகரியமற்ற சூழ்நிலைகளும் என் மனத்தை ஒன்றும் செய்யமுடியவில்லை-பிள்ளைப் பிராயத்திலே!

தங்கம்மாள் பாரதி.

1. பிள்ளைப் பிராயத்திலே

ஐந்து வயது முடிய எனக்கு அந்த நாட்கள் எத்தனை இன்பமயமா யிருந்தன! கடையம் ஒரு சிறு கிராமம் தான். பெரிய பெரிய ரஸ்தாக்களோ பெரிய கட்டிடமோ கடைத்தெருவோ ஒன்றும் அங்கு கிடையாது. நாகரிகப் பொருள்களோ வென்றால் அதுவும் பூஜ்யந்தான். ஆனால் அங்கு நகரங்களில் காணக்கிடைக்காத—காணமுடியாத ஒரு தெய்விக அழகும், சாந்தியும் ஒவ்வொரு பொருளிடத்திலும் தோன்றும். சுமார் இருபத்தைந்து வீடுகள். அந்த இருபத்தைந்து வீட்டுக்காரர்களும் ஐந்தாறு குடும்பத்தாரின் சந்ததியர். ஒவ்வொரு ஊருக்கும் ஸ்தல புராணம் இருப்பதைப்போல் எங்களூருக்கும் உண்டு. "கல்யாணி கோயில்" ஊரிலிருந்து மேற்கே இரண்டுமைல் தூரத்திலிருக்கிறது. கிராமத்தின் எதிரே ஒரு விஷ்ணு கோவில்—அல்ல ராமசுவாமி கோவில் இருக்கிறது. நகரங்களிலுள்ள கோயில் களைப்போல் இதற்கு வருமானங்கள் கிடையாது. கிராமத்துப் பெரிய வீட்டுக்காரர்கள் மனமுவந்து செய்யும் பொருளுதவியைக்கொண்டே திருப்பணி கள் நடந்துவந்தன. ஒரு உற்சவம் வந்தால் (அதாவது ஸ்ரீ ராமநவமி, புரட்டாசிச் சனிக்கிழமை, வைகுண்ட ஏகாதசி) குடை, வாகனம் யாவும் தன் சகோதரி யாகிய கல்யாணியம்மனிடமிருந்தே ராமஸ்வாமி இரவல் வாங்கிக்கொள்வார்! கிராமத்துப் பெண்க ளின் அட்டிகை, காரை முதலியவை ராமஸ்வாமியின்

திருமேனியை அலங்கரிக்கும். மேலே சொல்லிய விஷயங்கள் பழைய கிராமத்தைப் பற்றியது. பழைய கிராமத்திற்குத் தெற்கே புதுக் கிராமம். அதுவும் அந்தணர் வீதிதான். நடுவில் ஒரு தெரு. அது நடுத் தெரு. அது பிள்ளைமார் தெரு. புதுக் கிராமத்திலும் ஒரு பெருமாள் கோவிலுண்டு. பெருமாள் நமது ராமஸ்வாமியைக் காட்டிலும் தனவந்தர். கருட சேவை இரண்டு கிராமங்களிலும் மும்முரமாய் நடக்கும். எங்கள் கிராமத்திலுள்ள சில முதிய ஸ்திரீகளுக்கு ராமஸ்வாமியிடத்தில் அபாரமான பக்தி. ராமஸ்வாமிக்கு மரத்தினால் செய்த கருட வாகனம். புது கிராமத்துப் பெருமாளுக்குப் பித்தளைத் தகடால் செய்த கருடன். மர கருடன் செய்து வெகுநாளாய் விட்டபடியால் மேலே பூசிய வர்ணங்கள் அழிந்தும், கைவிரல் முதலிய ஒடிந்தும் போய்விட்டன. இப்படிப் போன காரணம், கிராமத்துக் குழந்தைகள் கருடாழ்வாரையும் ஒரு விளையாட்டுப் பொருளாக எண்ணி விளையாடியதே யாகும். இரவு ஒன்பது மணிக்கு இரு கோவில்களிலும் மூர்த்திகள் எழுந்தருளுவார்கள். ராமஸ்வாமி புது கிராமத்திற்குப் போகும் சமயம் பெருமாள் இங்கு வருவார். எங்கள் கிராமத்து ஸ்திரீகள் ராமனின் பக்தைகள் பின்வருமாறு பேசிக்கொள்வார்கள். "என்ன இருந்தாலும் நமது ராமர் அழகு ப்ரத்யேகமானதுதான்; நமது கருடன் முகத்திலிருக்கும் லட்சணம் இந்தப் பித்தளைக் கருடனுக்கு உண்டோ" என்பது போன்று.

பெண் கல்வி வேண்டும் என்று அக்காலத்தில் சிரத்தை கிடையாது. ஆனாலும் கிறிஸ்தவப் பெண் பள்ளிக்கூடம் ஒன்றும் கடையத்தில் இருந்தது.

அதில் பெண்கள் விவாகமாகும் வரை அதாவது பத்து வயது வரை படிப்பார்கள். சிலர்தான் பள்ளிக்கூடம் செல்வார்கள். பலர் வீட்டிலேயே யிருந்து பல்லாங்குழி, சோழி, கட்டம் முதலிய விளையாட்டுக் கலைகளில் தங்கள் ஆர்வத்தைச் செலுத்திக் கொண்டிருப்பார்கள். கிராமக்கிணற்றிலிருந்து தண்ணிர் கொண்டு வருவது பெண்களின் முக்கியமான வேலைகளில் ஒன்று. நான் எங்கள் வீட்டிற்கு அருமைக் குழந்தையானதாலும், சிறுவயதானபடியாலும் இந்த வேலையொன்றும் எனக்கு இராது. நடுத்தெருவில்த்தான் எங்கள் பள்ளிக்கூடம் இருந்தது. அங்குள்ள உபாத்தியாயரும் அவர் மனைவியும் எங்களுக்குக் கல்வி புகட்டினார்கள். கீழ் வகுப்புகளுக்கு அம்மாவும், மேல் வகுப்புகளுக்கு 'ஸாரும்' பாடம் நடத்துவார்கள். ஸ்கூல் கூரைக் கட்டிடம். எதிர் எதிராக இரண்டு அறைகள். அவைகளையடுத்து திண்ணைகள்; பெரியதிண்ணை, சின்னத்திண்ணை, பின்பு அதைச் சுற்றித் தோட்டம்: நாங்கள் எல்லாரும் சேர்ந்து பயிர் செய்த தோட்டம். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பயிர்த்தொழில் மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கிறது. நாங்கள் நட்டுப் பயிர் செய்த செடிகள் பலவகைப் படும். புஷ்பச் செடிகள், துவரை, அவரை, சாமந்திப்பூ, வாடா மல்லி, பன்னிர்ப்பூ, கொன்றை, அந்திமந்தாரை முதலியன.

அந்திமந்தாரை தான் எத்தனை வகை தெரியுமா? மஞ்சள், சிவப்பு, ரோஸ், வெள்ளை, வெள்ளையில் குங்குமத்தைக் கரைத்துத் தெளித்தது போன்றவை, மஞ்சளிலும் சிவப்புக் கலந்தது. மாலை நான்கு மணிக்குப் பள்ளிக்கூடம் விடுவார்கள். ஐந்தரை

மணிக்குத்தான் அந்திமந்தாரை பூக்கும்; அந்தப் பூக்கள் வெடிப்பதைப் பார்ப்பதற்காக, நாங்கள் தயக்கத்துடன் அங்கு நிற்போம். ஆனால், வாத்தியார் எங்களை அனுப்பி விட்டு நிம்மதியா யிருக்க வேண்டும் என்ற ஆசையினலோ என்னவோ "வீட்டுக்குப் போங்கள்" என்று எங்களை விரட்டி விடுவார். கன்றைப் பிரியும் தாய் போல் செடியிடம் பிரியா விடை பெற்று வீட்டுக்கு வருவேன். வீட்டில் நிலை கொள்ளாது. இந்தக் காலத்தைப் போல் வித விதமான பக்ஷணங்கள் அப்போது கிடையாது. வீட்டில் செய்த முறுக்கு, சீடை, நெல் வறுத்தமா, அவல் இவ்வளவு தான். காபி ஒட்டல் 'சாஸ்திரத்துக்குக்' கூடக் கிடையாது! கடைத் தெரு என்பது ஐந்தாறு கடைகளையுடையது. அங்கு காராசேவ், சீனி மிட்டாய், பொரிகடலை இவைகள் உண்டு. வேர்க்கடலை கூடக் கிடையாது! பொரிகடலை என்றால் பொரியும் கடலையும் என்று நினைக்கலாம். வறுத்த கடலைப்பருப்புக்குப் பெயர்தான் பொரிகடலை. கடலை வாங்க சிலநாள் கடைக்குப் போவேன்; எனது தோழிகளும் உடன் வருவார்கள். போகும் போதே பள்ளிக்கூடம் போக எங்கள் கால் இழுத்துச் செல்லும். ஏன்? அந்திமந்தாரையைப் பார்க்கத்தான். உபாத்தியாயருக்குத் தெரியாமல் தூரத்திலிருந்தவாறே புஷ்பதரிசனம் செய்துவிட்டு வீடுதிரும்புவோம்!

சிலசமயம் தன்னை மறந்து நின்றுகொண்டே இருப்போம். திரும்பும் பொழுது இருட்டிவிடும். வரும் வழியில் தேரடி மாடன் பிடித்துக் கொள்ளாதிருக்க வேண்டுமே என்ற பயம் எங்களை வாட்டும். மாடசாமியின் மேல் எங்களூராருக்கு அசாத்ய பக்தி. பக்கத்திற்குப் பக்கம் செங்கல்லும், சுண்ணும்பும்

வைத்து மாடசாமி கட்டியிருப்பார்கள். அது பிராம் மணரல்லாதாரின் தெய்வம். இவைகளுக்குத் தப்பி வீடு வந்தால் தாத்தாவிடம் சங்கீதம் கற்க வேண் டும்! அதுபெரிய விபத்து! பெரிய தீக்ஷிதர் கீர்த் தனைகளைச் சொல்லிக் கொடுப்பார், எனக்கும் சித் திக்கும். துளி அபஸ்வரம் விழுந்துவிட்டால் தொலைந்தது! அடிக்காவிட்டாலும் கூட, அடிப் பாரோ என்ற பயமே எங்களைக் கொன்றுவிடும். இரவு படுக்கை போடுவதில் தாத்தா மிகவும் சிரத்தை காண்பிப்பார். அம்சதூளிகா மஞ்சம்; காம்பறிந்த மலர்ப்படுக்கை என்றெல்லாம் சொல்லக் கேட்கிறோம். எங்கள் தாத்தாவின் படுக்கையைப் பார்த்தால் மேலே கூறிய படுக்கை வகைகளும் சிறந்ததல்ல என்று கூறத் தோன்றும். நல்ல இலவம்பஞ்சு மெத்தை, அதன்மேல் தூய வெண்மையான அவருடைய அங்கவஸ்திரம் விரித் திருக்கும். அதன்மேல் என்னைப் படுக்க வைத்துக் கதைகள் சொல்வார். எங்களூரில் ஆங்கிலம் படித்த குடும்பம் எங்கள் குடும்பந்தான். தாத்தா படித்த வர். அதனால் அலாவுதீன், அலிபாபா, கிளிக்கதை முதலியவைகளை ரொம்ப உணர்ச்சியோடு சொல் வார். அந்தக் கதைகளில் ஈடுபட்டுத் தன்னையே மறந்துவிடுவேன். இப்போதும் அந்தக் கதைகளை நினைக்கும்போது காதில் தேன் பாய்கிறது. கதை கதையாகவே தோன்றாது; நிஜம் போலவேதான் இருக்கும். "அவள் அப்பா புதுச்சேரியிலிருக் கிறார்" என்று யாராவது கசுமுசு என்று பேசிக் கொள்வார்கள். அப்போது என் நெஞ்சில் ஈட்டி யைச் சொருகுவதுபோல் ஒரு உணர்ச்சி தோன்றும். காரணம் சரியாகத் தெரியாதுபோனாலும் அங்கு

வசிப்பது முறைப்பிசகான காரியம் என்று மனம் குமுறும். பின்பு அந்த வேதனையாற வெகு நேரம் செல்லும். நான் இரண்டாவது வகுப்பு வாசித் தேன். வீட்டில் பாரதம் வாசித்தார்கள். பாரதத்தை ஒருவருக்கும் தெரியாமல் வாசிப்பேன். ராமாயணப் பதமும் எங்கள் வீட்டில் உண்டு. அதை என் பெரியம்மா படிப்பாள். அதில் தசரதர் கைகேயி யிடம் வரத்தைக் கொடுத்துவிட்டு ராமனை வனத் திற்கு அனுப்பிய பின்பு புலம்பும் சோகரஸம் மிகுந்த பாட்டான

சின்னஞ்சிறு தாமரை போல்
பொன்னான பதங்கள் நோகத்
தேடிவனம் ஓடிவிட்டாய் ரகுராமா
[ராமா]

நீயில்லா நாடெல்லாம்
நிலவில்லா முற்றம் போலே
நெடும் பாழடைந்ததையோ
[ரகுராமா, ராமா]

என்ற பாட்டைக் கேட்கும்போது, துக்கத்தினால் என் நெஞ்சே வெடிப்பது போலாகிவிடும். சில நாட் கள் விளையாட்டு ரஸத்தில் கழியும். ராமஸ்வாமி கோவில் தான் எங்களுக்கு விளையாட்டு ஸ்தலம். விளையாட்டு எத்தனையோ வகைப்படும் : தும்பைப்பூ முறுக்குச் சுற்றல். தும்பைப்பூ சில பட்டணவாசம் செய்பவர்களுக்குத் தெரிந்திராது. தும்பைப்பூ வெள்ளை வெளேரென்று பரிசுத்தமாக மலர்ந்திருக் கும். உருவத்தில் கிராம்பு போல சிறியதாயிருக்கும். கிராம்பின் நடுவில் மொட்டுப்போல் இருக்கிற தல்லவா? அதேபோல தும்பையின் நடுவிலும் ஒரு

மொட்டுண்டு. விசிறிபோல் ஓரிதழில் விரிந்து காம்புடன் இருக்கும். அந்தக் காம்பை அந்த மொட்டினடியில் சொருகி வந்தால் அது ஒரு சக்கரம்போல் அழகாக அமையும்; அதுதான் தும்பைப்பூ முறுக்கு. தும்பைப்பூவில் தேனும் இருக்கும்; அதனால் தின்பதற்கு ருசியா யிருக்கும். பாண்டி விளையாட்டு; பாண்டியாட பலவித பாடல்கள். மூச்சே இடையில் விடாமல் சொல்லும் பாட்டுக்களுமுண்டு. சமையல், சாப்பாடு எல்லாம் விளையாட்டில் உண்டு.

தை பிறந்ததி லிருந்து ஒவ்வொரு மாதமும் விசேஷங்கள் வந்துகொண்டிருக்கும். குழந்தைகளுக்கு விழாக் கொண்டாட பிரத்யேகமான பாட்டுக்கள்; பள்ளிக்கூடத்தில் நெல் குத்தும் பாட்டு, சிறுகதைப் பாட்டு, கும்மிப்பாட்டு, கோலாட்டப் பாட்டு என்று எத்தனையோவிதப் பாட்டுக்கள். சிலவற்றை மாதிரிக்குக் கொடுக்கலாம்.

நெல் குத்தும் பாட்டு

நெல்லுக் குத்தும் சகோதரிகாள்
நெல்லுக் குத்த வாருங்கள்
கல்லுரப்பனாக் குழியிலே நெல்லைக்
காலால் தள்ளியே—
சேலை வரிந்து கட்டுங்கள்
நேரே நிமிர்ந்து நில்லுங்கள்
வாலைப் பெண்களே வாருங்கள்
ஆஸ்...ஹஸ்...என்று போடுங்கள்
வட்டஞ் சுற்றிச் சுற்றியே
வாங்கி மெதுவாய்ப் போடுங்கள்
திட்டமாகக் கையினுல்
சேர்த்துப் புடைத்துப் போடுங்கள்.

கப்பல் பாட்டு

ஐயய்யோ, கப்பல் ஆடுது ஓடுது
அக்கக்கா மனம் வாடுது வாடுது
தென்றிசைக் காற்று வீசுது வீசுது
சிறியே கப்பல் மோதுது மோதுது
இடி இடித்துக் காற்றடித்து
மின்னி மழை பொழிய
ஏழையான பெண்கள் நாமும் இதிலே
சிக்கி மயங்க,
கடும் பசியால் மிக வருந்தி
கை கால்கள் ஆடி
காதடைத்துக் கண்ணிருண்டு
கழுத்து வலி கொண்டோம்.
கடலிலே ஒரு கரையும் காணோமே
மாலுமி ஐயாவே இங்கு வாருமே.

2. பள்ளிப் பரிசு

ஓர் நாள் பள்ளிக்கூடத்தில் கலகலப்பு ஏற்பட்டது. காரணம் "மிசி"யம்மாள் வரப்போகிருள் என்ற சந்தோஷந்தான். மிசியம்மா வெள்ளைக்கார ஸ்திரீ. தமிழ் தெரியும். மிசியம்மாளுக்குக் காணிக்கையாக ஒவ்வொருவரும் ஒரு எலுமிச்சம் பழம் கொண்டுபோக வேண்டும். காலணுவைக் கையில் வைத்துக்கொண்டு கடைத்தெருவெல்லாம் அலைந்தும் எலுமிச்சம்பழம் அகப்படவில்லை. கவலையினுல் வாடிச் சோர்ந்து கீழே உட்கார்ந்தேன். தாத்தா வெளியிலிருந்து வந்தார். "என்ன வேண்டும், தங்கப் பெண்ணே" என்ருர். மிசியம்மாள் மத்தியானம் வரப்போகிருள், எலுமிச்சம்பழம் கிடைக்கவில்லை யென்று விம்மினேன். தாத்தா உடனே சென்று தமது நண்பரின் தோட்டத்திலிருந்து நாலு எலுமிச்சம்பழம் வாங்கி வந்தார். எத்தனை பெரியது! சாத்துக்குடி, ஆரஞ்சிப்பழம் போன்று அத்தனை பெரியது. எனக்குச் சந்தோஷம். மிசியம்மா அதைப் பார்த்து சந்தோஷப்படுவாள் என்று என் மனம் கற்பனை செய்து மகிழ்ந்தது! பின்பு மிசியம்மாளுக்கு ஏற்ருற் போல், 'டிரஸ்' அணியவேண்டும் என்ற பிரச்னை. ஆனுல் ஆடை அணி விஷயத்தில் எனக்குக் கஷ்டம் கிடையாது. தாயார் புதுவையிலிருந்து வெள்ளை மஸ்லினில் படிப்படியாக சுருக்கு வைத்துத் தைத்த பாவாடையும்,

பஸ்லினிலே புதுமாதிரியான ஜாக்கெட்டும் வாங்கி அனுப்பியிருந்தார். மிசியம்மாளை 'தரிசிக்க, ஆடையும், 'எலுமிச்சம்பழமும் உயர்ந்த ரகத்தில் கிடைத்துவிட்டன. வேறென்ன வேண்டும்? 11 மணிக்கு மிசியம்மா வருவதா யிருந்தது. ஒன்பது மணிக்கே சிறுமியர் கோஷ்டி புதுப்புது அலங்காரங்களோடு பள்ளிக்கூடத்து வாயிலே முற்றுகையிட ஆரம்பித்தது. எங்கள் பள்ளிக்கூடத்தில் முப்பது பெண்கள் படித்தார்கள். மிசியம்மா வந்த அன்று மட்டும் 50 சிறுமிகளுக்குமேல் கூடிவிடுவார்கள். மிசியம்மாள் துணிப்பை, நூல்கண்டு, வெள்ளைக்கார பொம்மை, அட்டைப்படம் முதலிய பரிசுகளை பள்ளிக்கு வந்த சிறுமிகளுக்கு வழங்குவார் என்ற ஆசையோடு பெண்கள் ஓடிவருவார்கள். கல்யாணமானவர்கள் கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்தில் படித்தால் 'தீட்டு' என்று சொல்லும் ஆசாரக்காரப் பாட்டிகளும் அங்கு வெகுமதிக்காக குழந்தைகளை அனுப்பி விடுவார்கள்! மிசியம்மாளுக்கு இதெல்லாம் தெரியாதென்பதில்லை. எப்படியும் பெண்கள் அதிகமாகத் தன் ஸ்கூலில் சேர வேண்டும் என்ற ஆவலினால் புதிதாக வந்த பெண்களுக்கு ஏதேனும் பரிசு கொடுத்தனுப்புவாள். ஒன்பது மணியிலிருந்து, மிசியம்மாவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். வாசலில் கடகடவென்று சப்தம் கேட்டால் "அதோ மிசியம்மாள்" என்று கூச்சலிட்டு எல்லோரும் பெஞ்சுகளில் அமெரிக்கையாய் உட்கார்ந்திருப்போம். அந்த சப்தம் தண்ணீர் வண்டியின் சப்தம் என்பது தெரிந்தவுடன் பழைய படி கசமுச என்று சம்பாஷணைகள் ஆரம்பமாகி விடும்.

நாங்கள் இப்படி ஐந்தாறு தடவை ஏமாறிய பின் மிசியம்மாள் வந்தே விட்டார்! அவர் பூட்ஸ் சப்தத்தைக் கேட்டு, என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. சொல்லவேண்டிய பாடங்கள், கணக்குகள் எல்லாவற்றையும் மனதிற்குள் ஒரு முறை சொல்லிக் கொண்டேன். "பார்வைக்கு எப்படியிருப்பளோ? நல்லவளோ, சிடுமூஞ்சியோ!" என்று என்னுடையதெல்லாம் எண்ணித் தவித்தது மனது. என்ன பிரைஸ் நமக்கு கிடைக்கப்போகிறதோ? புஸ்தகந்தான் உயர்ந்த பிரைஸ்! ஆனால், சுவிசேஷம் போன்ற கிறிஸ்தவ மதப் புஸ்தகங்களாக அல்லவா இருக்கும்! என்ன பிரயோசனம்? என்று அலட்சியமாக எண்ணிற்று என் மதப்பற்றுக் கொண்ட மனம். மதப்பற்று எப்படி என்றால் வீட்டில் தினமும் ராமாயணமும் பாரதமும் கேட்டு எனக்கு நமது மதத்தில் பக்தி அதிகம். எதிர்பார்த்த மிசியம்மாளும் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். 'ஸாரும்' அம்மாவும் இரண்டு பக்கமும் கைலாகு கொடுக்க, மிசியம்மாள் எங்களுக்கருகில் வந்தவுடன் "அம்மா சலாம்" என்று எல்லாரும் வணங்கினோம். பின்பு மிசியம்மாள் நாற்காலியில் அமர்ந்தாள். இப்பொழுதுதான் நெருக்கடியான கட்டம்!

எலுமிச்சம் பழம் கொடுக்க வேண்டிய சமயம் வந்து விட்டது. நடுங்கும் விரல்களோடு அந்தப் பெரிய எலுமிச்சம் பழத்தை எடுத்து மிசியம்மாள் எதிரில் வைத்தேன். மிசியம்மாள் புன்சிரிப்போடு என் கையைப் பிடித்தாள். உடனே அவள் முகம் திடுக்கிட்டதுபோல் என்னை வெறிக்கப் பார்த்தாள். ஸார் பக்கம் திரும்பி, இந்தக் குழந்

தைக்கு உடம்பு சரியில்லையா? கை ஜில்லிட்டுப் போயிருக்கிறதே! எனவே, ஸார் அசட்டுச் சிரிப் போடு "இல்லைங்க, சும்மா காத்திலே நின்னிருக்கும், அதனுல் அப்படியிருக்கும்" என்ருர். இதை மிசி ஒப்புக்கொள்ளவில்லை. என் பக்கம் திரும்பி "உனக்கு உடம்பு என்னம்மா?" என்ருள். நான் "ஒன்றுமில்லையே சரியாய்த்தான் இருக்கிறது" என் றேன். மிசி "சரி; இதில் உட்கார்ந்துகொள்" என்று கிட்ட விருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டி ஞள். நானும் பயம் தீர்ந்து அதில் உட்கார்ந்தேன். இப்படி முதல்பார்வையிலே மிசியம்மாளின் அன்பை நான் பெற்றது என் தோழிகளுக்குப் பொருமை யைக் கொடுத்தது. "வெள்ளைக்காரச்சி மாதிரி பாவாடை உடுத்திக் கொண்டிருக்கிருள். அது தான் மிசியம்மாளுக்கு அவளைப் பிடித்திருக்கிறது" என்று முணுமுணுத்தார்கள். எல்லாரும் எலுமிச் சம் பழம் கொடுத்தானதும், பரிட்சை ஆரம்பமா யிற்று. தமிழ், கணக்கு, டிராமா, பாட்டு எல்லாம் நடை பெற்றன. நாங்கள் நடித்த கதை தெரிந்த கதை தான்:

தந்தை அருமையான தோட்டம் போட்டு வெகு தூரத்திலிருந்து உயர்ந்த ஜாதி மரஞ் செடி வாங்கி வந்து நட்டுப் பயிர் செய்திருக்கிருர். மகன் சிறு பிள்ளை; புதுக்கத்தி தனக்குக் கிடைத்த மகிழ்ச்சி யில் அதை அடியோடு நறுக்கி விடுகிருன். தந்தை தோட்டத்தைப் போய்ப் பார்த்து மரஞ்செடிகளின் கதியைக்கண்டு வயிறெறிந்து வீட்டுக்கு வந்து எல்லா ரிடமும் விசாரணை செய்கிருன். சிப்பந்திகள் யாவரும் எஜமானனது கோபத்தைக் கண்டு நடுங்கினர்கள். மகனிடமும் கேட்கவும், சூதறியாத அந்தப் பிள்ளை

"நான் தான் வெட்டிப்போட்டேன் அப்பா ; கத்தி நன்ருய் வெட்டுகிறதா என்று பார்த்தேன், ஒரே வீச்சில் நறுக்கி விட்டது" என்று கூறவும், அதைக் கேட்ட தகப்பன் மகனது உண்மை கூறும் சுபாவத்தை மெச்சி "இது போன்ற செடி ஆயிரம் போனுலும் பெரிய காரியமில்லை. நீ உண்மை கூறியது பதினுயிரம் செடிகளுக்குச் சமானம்" என்று தட்டிக் கொடுத்தான் என்பது தான் கதை.

இதில்நான் தகப்பனுக நடித்தேன். என் மாமாவின் பெண் மகனுக நடித்தாள். நான் ரொம்பவும் உணர்ச்சியோடு நடித்ததற்காக எனக்கு மெடல் கிடைத்தது. நான் அடைந்த பெருமையும் மகிழ்ச்சியும் சொல்லத்தரமன்று. இப்போது "பிள்ளைப் பிராயத்தை இழந்தேனே" என்று தோன்றுகிறது. அந்த இன்பம் முதுமையில் கற்பனை செய்யக்கூட முடியாது. பின்பு மிசியம்மாள் எங்களுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க வந்தார். அந்தக் குரல் எத்தனை கீச்சா யிருந்தது.

"இயேசு, இயேசு,
என்னிடம் வருவார் இயேசு"

என்பது பல்லவி. உபதேசத்தில் திறமை கொண்டவர்கள் கிறிஸ்தவ உபாத்திமார். சிறுமிகளாகிய எங்களை ஹிந்து மதத்தைப் புறக்கணிக்கவும் இயேசு மதத்தைப் போற்றவும் வேண்டுமென்று அவர்கள் கற்பித்தார்கள். தினமும் காலை மாலை ஜபம் நடைபெறும். அப்போது "பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று ஆரம்பித்து ஆமென் என்று முடிக்கும் வரை எங்களுக்கு, ஏதோ

தவறு செய்கிறோம் என்ற உணர்ச்சியிருக்கும். "உங்கள் சாமி எல்லாம் வெறும் கல்லு; எங்கள் இயேசுதான் நிஜக்கடவுள்" என்று போதிப்பார்கள். நாங்கள் இதை வீட்டிலே சொன்னால், மறுநாள் பள்ளிக்கூடம் போக விடமாட்டார்களே என்ற பயத்தினால் அவர்களிடமும் சொல்ல முடியாமல், எந்தத் தெய்வம் உண்மையானது என்று தீர்மானித்துக் கொள்ளவும் முடியாமல் தவிப்போம். ஓரிரண்டு வருஷங்கள் உற்சாகமாகக் கழிந்தன.

3. இயற்கை இன்பம்

ஆடையத்தில் வருஷம் ஒரு "சாஸ்தா பிரீதி" நடக்கும். நாங்களும் கோயிலுக்குச் சென்றோம். அங்கு போகும் வழியை நினைக்க நினைக்க ஆனந்தம் பொங்கும்; அத்தனை மனோகரமானது. ஊருக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்தில் கல்யாணி அம்மன் கோயில். அதற்குப் போகும் வழியில் "ஸப்த ஸாரா நதி" ஆற்றைக் கடந்துதான் அங்கு செல்ல வேண்டும். ஆற்றங்கரையின் இருபுறமும், புன்னை, தென்னை, வாழை மரங்களும் மஞ்சள் நார்த்தை முதலியவும் அடர்ந்து நிற்கும். மருதாணிப்பூ, நந்தியா வட்டைப்பூ, மஞ்சள் நார்த்தம்பூ, இலுப்பைப்பூ, செந்தாழம்பூ இவைகள், கிராமத்திலிருந்து, ஆற்றங் கரை செல்பவரைத் தங்கள் நன்மணத்தினால் மனங் குளிரச் செய்யும். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற காட்சி. ஆற்றைக் கடந்து அப்பால் சென்றால், ஒரு புறம் குளத்திலிருந்து ஓடி வரும் வாய்க்காலும், நாகமரங்களும், நான்கு புறமும் வயல்களும் உண்டு. குதித்துக் குதித்துக் கீழே கிடக்கும் நாகப்பழங்களைப் பொறுக்கி, ஓடையில் அலம்பித் தின்றால், அந்த சுகம் எப்படியிருக்கும் என்பது அனுபவிப்பவர்களுக்குத் தானே தெரியும்! அவற்றைத் தாண்டினால் வாய்க்காலின் மூலஸ்தான மாகிய குற்றால லிங்கம்பிள்ளையின் குளம். அல்லிப் பூக்களும், அன்னக் கூட்டங்களும் குளத்தில் கொம்மாளம் அடிக்கும். அதையும் கடந்தால் மாட்டு

"பௌண்ட்" அதில் அடைபட்ட திருட்டு மாடுகள் திருதிருவென்று விழித்துக்கொண்டு நிற்கும்.

நாம் இவ்வளவு தூரம் செல்வதற்குள் எத்தனையோ பேர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்; அரிவாளும் கையுமாய்க் காணப்படும் பண்ணையாட்களையும், நாற்றுக் கட்டு சகிதம், குழந்தைகளோடு வயல்களுக்குச் செல்லும் தாய்மார்களையும், ஒரு நாக மரததிலிருந்து, மற்றோர் மரத்திற்கு விரைந்து செல்லும் பாம்புகளையும், நாயகிலையச் சந்திக்கச் சரேலென்று ஓடும் சாரைப் பாம்புகளையும், நீச்சுப் பந்தயம் போடும் தண்ணிப் பாம்புகளையும், மேய்ச்சலுக்குச் செல்லும் மாட்டு மந்தைகளையும், எதிரில் காணலாம். முன்னேவரும் மனிதர்களை அவர்கள் எந்த வகுப்பு, என்று தெரிந்து கொள்ளுவதற்காக "ஏய் நீ மேல் ஆளா, கீழ் ஆளா?" என்று அதிகாரத்துடன் கேட்கும் பிராம்மண ஸ்திரீகளையும் சந்திக்கலாம். "இப்படிக் கேட்கிறார்களே, இதுநியாயமா?" என்று கேட்கலாம். ஆனால் 30 வருஷத்திற்கு முந்திய சமாசாரம்; இடமும் கிராமம். பிராம்மணரல்லாதார் ஹரிஜனங்கள், இவர்கள் பிராம்மணர்களிடம் தேவதா விசுவாசம் வைத்திருந்த காலம். வயலைச் சொந்தமாகக் கொண்ட பிராமணனைக் காட்டிலும் அதிலேயே நிலத்தோடு நிலமாக நில மகளை அணைந்து, உலகத்திற்கு அமுதூட்டும் உத்தம ஊழியர்களாகிய பண்ணையாட்கள், அந்தணர்களைத் தமது தெய்வமாகவே மதித்தார்கள். அதனால் மேலேகூறிய வினா எழுந்ததும், தீண்டும் வகுப்பாராயிருந்தால், "சும்மா போங்க அம்மா, மேலான்தான்" என்பார்கள். மற்றவர்களானால் அப்படியே விலகி வயற்காட்டில்

தங்கிச் சென்றுவிடுவார்கள். கல்யாணி அம்மனுக்கு ஊரைவிட்டு இரண்டு மைலில் ஏன் கோயில் அமைய வேண்டும் என்பதற்கும் ஓர் கதையுண்டு :கல்யாணி கலாமோகினி; சுவாமி வில்வவனநாதர். கல்யாணி கோவில் ஆதிகாலத்தில் ஊருக்கடுத்தாற்போல் இருந்தது. ஊராரோ எப்போதும் நெல் குத்திக் கொண்டும், மாவிடித்துக்கொண்டும் தங்கள் ஆகாரத்தைத் தயார்செய்ய வேண்டி யிருந்தது. அம்மனுக்கு உலக்கைச் சப்தம் பொறுக்க முடியவில்லை. ஒருநாள் கோவில் தர்மகர்த்தரிடம் கனவில் தோன்றி, "எனக்கு உங்கள் நடுவில் இருந்தால் காது செவிடாகிவிடும்போல் இருக்கிறது. நான் சற்று தூரம் சென்று மலைமேல் வசிக்கப்போகிறேன்" எனவும் மேற்படி தர்மகர்த்தா "தேவி, நாங்களே விலகிப்போகிறோம்; எங்களது வீடுகளைத் தூரத்தில் தங்களுக்குத் தொந்தரவு இல்லாமல் அமைத்துக்கொள்கிறோம். அந்த இடத்தைமட்டும் குறிப்பிடவேண்டும்" என்றார். தேவி உடனே கையிலிருந்த கடகம் என்னும் ஆபரணத்தைக் கழற்றிக் கிழக்குத் திசையில் எறிந்தாள். அது விழுந்த இடத்தில் ஜனங்கள் வீடு கட்டிக் குடியேறினார்கள், என்பது கதை. கல்யாணி அம்மன் கோவிலிலிருந்து சற்று தூரத்தில் பத்திரகாளிகோவிலும் குளமும் இருக்கின்றன. பாரதியார் "ஜகத் சித்திரம்" என்ற கட்டுரைகளில் வர்ணித்திருப்பது அந்தக் கோவிலைப் பற்றித்தான். உலகத்திலுள்ள பறவை இனங்களெல்லாம் அந்தப் பெரிய ஆலமரத்தில் வசிக்கின்றனவோ, என்று எண்ணும்படி அத்தனை பக்ஷிக்கூட்டம் அங்கு காணப்படும். முறையே கல்யாணி கோவிலின் பின்புறமும், பத்திரகாளி

கோவிலருகிலும், மாடசாமிகளின் கோவில்கள் உண்டு. வில்லடிச்சான் பாட்டும், பொங்கலும், கொடையும் மாடசாமியின் தனிச்சிறப்புகள்.

பயந்தால் பிடித்திடுவேன்
பாடினால் ஆடுவேன்
நயந்தால் அருள்புரிவேன்
நாடுதனைக் காத்திடுவேன்.

என்று மாடன் சொல்வதாகக் கூறுவார்கள். மாடன் பிடித்த பெண்களும், பேய்பிடித்த பெண்களும் அக்காலத்தில் அதிகம்.

" ஆடு வேண்டும், கோழி வேண்டும்
ஐஞ்சு மாசச் சூலி வேண்டும் "

என்றெல்லாம் மாடன் கேட்கும் என்பார்கள்.

மாடன் கோவிலைத் தாண்டிச் சென்றால், மலை மேல் ஒரு சுனையும் குகையும் உண்டு. அந்தச் சுனையில் கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமை ஸ்நானம் செய்தால், கங்கையில் ஸ்நானம் செய்த பலன் உண்டு என்று கூறுவார்கள். இதை நம்புபவர்களும் அக்காலத்திலுண்டு. அந்தச் சுனையில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் போட்டால், காசிக் கங்கையில் போய் விழுமென்றும், கங்கையில் போட்ட புஷ்பம் சுனையில் மிதக்கும் என்றும் கூறுவார்கள்.

அதற்கப்பால் கொஞ்சம் வழி நடந்தால், தோரண மலைக்குப் போகும் பாதை. தோரண மலையில் ஒரு சுப்பிரமணியர் கோவில். அங்கு பங்குனி உத்திரம் விசேஷம். மற்ற நாட்களில்

திருடர் கூட்டத்திற்கு உறைவிடம். அலிபாபா கதையில் திருடர்கள் நாற்பது பேர் உண்டென்றும், அவரது குணவிசேஷங்களையும் எல்லாரும் படித்திருப்பார்கள். எங்கள் ஊர்களுக்கு வரும் திருட்டுக் கூட்டத்தார், அவர்களையும் விட வீர தீரமும், கொடூரமும் சூட்சும புத்தியையும் உடையவர்கள். தோரண மலையில் அடிக்கடி வந்து தங்கும் திருடர் கூட்டத்தைப் பற்றி அற்புதமான கதைகள் எல்லாம் எத்தனையோ கூறுவார்கள். பின்பு "சூட்சுமமுடையவர் கோவில்'' (ஒரு சாஸ்தா). சூச்சமடையார்கோவில் வாசலில் மண் குதிரைகளும், மண் யானைகளும் ஆண் பெண் உருவங்களும் நிறைந்திருக்கும். ஆனால் அத்தனையும் உடைந்தவை.

சூச்சமடையாரைத் தாண்டியவுடன், ஒரு பெரிய ஆற்றையும் தாண்ட வேண்டும். ஆறு கருங்கற்கள், பாறைகள் நிறைந்திருக்கும். தண்ணீரோ பார்க்கப் பளிங்கு போலும், சுவையில் கருப்பஞ்சாற்றையும் ஒத்திருக்கும்.

அங்கிருந்து சுமார் இரண்டு மைல் காட்டிற்குள் சென்றால், தேக்கந் தோப்புக்கு நடுவே, மழையில் நனைந்து, வெயிலில் உலர்ந்து, காற்றில் களித்து, தனி மோனத்தில் இருக்கும் "தலைமலை ஐயனை''க் காணலாம். இத்தனை தூரம் வழி நடந்த இளைப்பும், அந்த மூர்த்தியைப் பார்த்தவுடன் பறந்து போகும். ஏதோ ஒரு அமானுஷிகமான சக்தி நம்முள் பாயும். எங்கும் ஒரே சாந்தி மயமான காட்சி. மஞ்சாடி மரங்களும், கோரைப் புற்களும் கண்ணுக்கெட்டிய தூரம் காணப்படும். பிரும்

மாண்டமான ஆறு. அங்கு அணைகட்டி யிருப்பதால், ஒரு அருவி போல் தண்ணீர் விழும். எப்படிப்பட்ட நாஸ்திகனுங்கூட அந்த இடத்தில் தெய்வ பக்தி பெறுவான். அத்தனை அற்புதமான சிருஷ்டி. பூஜையின் சிறப்பையும், சாப்பாட்டின் சம்பிரமத்தையும் சொல்லி, வாசகர்களைக் களைப்படையச் செய்வது சரியல்ல. மாலை நாலு மணிக்கு வீடு திரும்பினோம்.

4. சிறையும் விடுதலையும்

ரங்கூனிலிருந்து எங்கள் மாமா வந்தது எங்களுக்கெல்லாம், ஏதோ ஒரு புதையல் அகப்பட்டது போல சந்தோஷத்தைக் கொடுத்தது. வீட்டில் எப்போதும் இன்னிசை முழங்க ஆரம்பித்தது. மாமா மிகவும் தாய்நாட்டபிமானங் கொண்டவர். அதனுல் நம்ம ஊர் சாமான், நமது வீடு, நமது கிராமம், நமது கோவில், நமது இளைஞர், நமது பெண்கள் என்று கூறிக் களிப்படைவார். கடைசியாக நமது ஊர் கீரை முதற்கொண்டு ஒரு தனிச் சிறப்புவாய்ந்தது என்று கூறிப் பெருமை கொள்வதில் அவருக்கு ரொம்பத் திருப்தி. நாங்களெல்லாரும் இத்தனை சந்தோஷமாக இருப்பது, கடவுளுக்குப்பொறுக்கவில்லையோ என்னவோ ?

ஓர் நாள் காலையில் ஆற்றங்கரை சென்ற மாமா திரும்பி வரவில்லை. வீட்டில் இன்னும் ஒருவரும் காலை உணவும் உட்கொள்ளவில்லை. மாமா போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதாகவும், திருநெல்வேலி ஸப் ஜெயிலுக்கு அவரைக் கொண்டுபோகப் போகிருர்களென்றும், வீட்டுக்குத் தகவல் வந்தது. இந்த விபரீதச் செய்தியைக் கேட்டு வீட்டில் எல்லாரும் பொறி கலங்கி விட்டார்கள். என் பெரியம்மா, மிகவும் தைரியம் கொண்டவள். தமையனுக்கு வேண்டிய சாப்பாட்டை ஒரு இலையில் மடித்துக் கட்டி எடுத்துக்கொண்டு, நேரே போலீஸ் ஸ்டேஷ

னுக்குச் சென்றாள். நானும் அவளோடு சென்றேன். ஸ்டேஷனுக்குள் எங்களைப் போக அனுமதித்தனர். சோகக் கடலில் அண்ணனும், தங்கையும் ஆழ்ந் திருந்தார்கள். "கால்மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. இனிமேல் நீங்கள் வெளியே செல்ல வேண்டும்" என்று போலீஸார் கூறவும், ஒருவாறு தெளிந்து நாங்கள் வெளியே வந்தோம். என் மாமா தன் சகோதரியிடம் கூறிய வார்த்தை மட்டும் இன் னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "பார்வதி, நான் திரும்பி வருவது நிச்சயமில்லை. நம் வீட்டில் ஆண், பெண் என்ற வித்தியாசம் வேண் டாம். நீ குடும்பத்தைப் பார்த்துக்கொள்." அவ் வளவுதான்; 'தடால்' என்று சிறைக் கதவை இழுத் துத் தாளிட்டுப் பூட்டினான் ஒருவன். (சிறை என்பது ஸ்டேஷனிலுள்ள சிறு அறை).

அன்று முழுதும் எங்கள் வீட்டில் ஒரே அமைதி குடிகொண்டது. அதாவது ஸ்மசானத்தில் எல்லோர் மனத்திலும் ஒரு வைராக்யம் ஏற்படும் என்பார்களல்லவா? அது போன்ற நிலை. ஒருவரோ டொருவர் பேசுவது கிடையாது. யந்திரம் போல் வேலைகளைச் செய்வதும், உறங்குவதுமாய் நாட்கள் கழிந்தன.

அந்த நாட்களை இப்போது நினைத்தாலும் பயங்கரமா யிருக்கிறது. சிறிது நேரத்தில் அணையும் விளக்கு, திடீரென்று பிரகாசித்துப் பின்பு நின்று விடுவதைப்போல், எங்கள் வீட்டிலும் உற்சாகம் மிதமிஞ்சி யிருந்து திடீரெனக் கவலைப் படுகுழியில் வீழ்த்தியது. மாமாவின் விடுதலைக்கான அறிகுறி களே காணப்படவில்லை. குற்றம் சாட்டாமல் கைது

செய்திருக்கிறார்கள். விசாரணையும் இல்லை. கவலை மேகம் எங்கள் வீட்டைக் கவ்வியது. உயர் நீதி மன்றமாகிய கடவுளின் சன்னிதியில் போய் முறையிடுவதைத் தவிர வேறு வழி ஏது? அரசப் பிரதக்ஷிணம் ஆலய வழிபாடு முதலியன செய்தார்கள். ஊரார் செய்யும் கேலிப் பேச்சும், பரிகாசமும் எங்களை வேல் கொண்டு குத்தியது. இத்தனைக்கும் என் பாட்டி அசாத்யமான மனோதிடத்துடனிருந்தாள். சிறைவாசம் இந்த நாட்களைப்போல், அந்தக் காலத்தில் கௌரவத்தைக் கொடுப்பதில்லை. "மீளா நரகம்" என்றே அதைக் கூறவேண்டும். நாலைந்து தடவை திருநெல்வேலிக்குச் சென்று சிறையதிகாரிகளைக் கண்டு பேசிச் சாப்பாட்டு வசதிகளை மட்டும் செய்துவிட்டு வந்தார் தாத்தா. ஒரு மாசம் இப்படி ஒரு யுகம் எனக் கழிந்தது.

ஓர் நாள் மத்தியானம் வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. மாமா அதினின்றும் இறங்கி உள்ளே வந்தார். எங்கள் எல்லாருக்கும் இது கனவா, நனவா என்ற பிரமிப்பு உண்டாயிற்று!

5. கதையும் கடமையும்

வீட்டையத்தில் நாரத்தை, எலுமிச்சை முதலிய பழவகை யதிகம். மணமும் ருசியும் கொண்டவை. சில நாட்களில் ராமஸ்வாமி கோவில் மதில்மேல் உட்கார்ந்து மனோராஜ்யத்திலிறங்கி விடுவேன். வீட்டில் பலவித ஊறுகாய்கள் போட்டிருப்பார்கள். சுண்டைக்காயைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியம். கை தவறினால் உருண்டோடுவதும், சிறு மணிகளைப் போல் பிரகாசிப்பதும், வெடுக்கென்று கடிபடுவதும், அத்தனை கசப்பின் நடுவிலும் ஒரு ருசி யிருப்பதையும் எண்ணி வியப்புற்றேன். இப்படி சுண்டைக்காயின் மகிமையை ஆராய்ந்து கொண்டிருக்கும் என்னை, என் பெரியம்மா திடீரென்று அழைத்தாள். அவள் கூப்பிட்டது என் காதில் விழவில்லை. அம்மா கோபத்தோடு "கூப்பிடுவது காதில் விழவில்லையா?" என்று இரைந்தாள். என் இன்பக் கனவிலிருந்து விழிப்பு மூட்டியதால், நானும் கோபத்தோடு, "அந்த நாரத்தங்காய் சொல்வது, இந்த சுண்டைக்காய் கேட்கவேணுமோ? என்றேன். பெரியம்மா, ஆச்சரியத்தோடு, "என்னடீ ஊறுகாய்ப் பைத்தியம் பிடித்து விட்டதா?". "இல்லை, என்னை ஒரு சுண்டைக்காயாக எண்ணினேன். நான் சுண்டைக்காயானால், நீ நாரத்தங்காய் தானே?" என்றேன். எல்லாரும் இதைக் கேட்டு சிரித்தார்கள். பின்பு அம்மா, "சரிதான்; சொன்னபடி கேட்காவிட்டால், சுண்டைக்காயை நறுக்கத்தான் வேண்டும்" என்

ருள். தந்தையாரிடம் இந்த விஷயத்தைக் கூறினர்கள். அவர், "அதற்கென்ன, குழந்தையின் மனம் கற்பனை நிறைந்தது" என்று சந்தோஷித்தார்.

எங்களூரில் சமாராதனை செய்வார்கள். ஆனல் அவைகளைப் பெரும்பாலும் கோயில்களிலே தான் செய்வார்கள். கல்யாணி அம்மன் கோயிலில் ஓர் நாள் சமாராதனை; தெருவினர் எல்லாரும் புறப்பட்டார்கள். பெரியவர்களும், புருஷர்களும், முன்னல் நடந்து விட்டார்கள். குழந்தைகளையும், தயிர், பால் முதலிய பந்தோபஸ்தான சாமான்களையும் வண்டிகளில் வைத்துக்கொண்டு புறப்பட்டனர். நானும் ஒரு சாமான் வண்டியில் ஏறினேன். கல்யாணி கோவிலுக்குப் போகும் பாதை நன்கு ஒழுங்காயிராது; கரடு முரடானது. மேடும், பள்ளமும். ஆற்றைத் தாண்டி மேடு ஏறும் சமயத்தில், மாடுகள் படுத்துக்கொண்டன. மாடுகளைத் தார் போட்டு எழுப்பிவிட்டதும், ஒரு மாடு கோபத்தோடு எகிறிக் குதித்தது. வண்டிச் சக்கரம் ஒரு மரத்தின் வேரிலேறி, ஒரு பெரிய பள்ளத்தில் விழுந்ததும், கொப்பறைகளில் வைத்திருந்த பால், தயிர் யாவும் எங்கள் மேலே கொட்டியது. வண்டியும் குப்புறச் சாய்ந்தது. 'வண்டி குடைசாய்ந்து விட்டது. ஐயோ,' என்று கத்தினேன். அருகில் வந்தவர்கள், வண்டியை அப்படியே செங்தூக்காய் தூக்கி நிறுத்திவிட்டார்கள். அன்று பால், தயிர் அபிஷேகத்தோடு தலை தப்பியது.

பள்ளிக்கூடத்தில் கதைகள் மூலம் பாடம் நடத்துவார்கள். கதைகள் அப்படியே மனத்தில் பதிந்துவிடும். கள்ளமற்ற பிள்ளைப் பிராயமல்லவா?

"ஈசா, யாக்கோப் இருவரும் சகோதரர்கள். தந்தைக்கு வயதாய் விட்டபடியால் குடும்ப பாரத்தையும், சொத்தையும் தன் மகனிடமே ஒப்புவிக்க எண்ணியிருந்தான். மூத்த மகன் வசம்தான் சொத்தைக் கொடுப்பது வழக்கம். தம்பி யாக்கோபோ, துடுக்கான சிறுவன். தாயும் சின்ன மகன் கட்சிதான்.

அதனால் அவர்களிருவரும் கலந்து யோசித்து, சொத்துக்களை ஈசா அடையமுடியாதவாறு சதி செய்தனர். மூத்த மகன் ஆடு மேய்க்கச் சென்றிருந்தான். இருட்டிய பின்புதான் அவன் வருவது வழக்கம். தகப்பனுக்குக் கண் பார்வை மங்கிவிட்டது. மூத்த மகன் ஆண்மையுடையவன். அவன் சரீரமும் அதற்கேற்பவே அமைந்திருந்தது. இளையவனோ நேர் மாறானவன். பெண்களைப் போல மழமழப்பான சரீரம் அவனுக்கு. அந்தி மங்கும் நேரத்தில் இலேசான, ஆட்டு ரோமத்தாலான, கம்பளிச் சட்டையை அணிந்து, யாக்கோப் தந்தையிடம் சென்று, "அப்பா, இன்று சொத்தை என்னிடம் ஒப்படைப்பதாகச் சொன்னீர்களே, அதைச் செய்யுங்கள்" என்றான். தகப்பன் "அப்பா, நீ யார்? ஈசாவா, யாக்கோபா?" "தந்தையே, நான் ஈசா" என்று புளுகினான் யாக்கோப். யார் என்று அறிந்து கொள்ளுவதற்காக மகனை அருகில் அழைத்துத் தழுவிக்கொண்டான் கிழவன். கம்பளிச் சட்டை அணிந்திருந்த படியால், சரிதான்; உடம்பில் உரோமம் அடர்ந்த ஈசாதான், குரல் மட்டும் யாக்கோபைப் போலிருக்கிறதே! ஏதோ வெயிலில் அலைந்ததினால் குரல் மாறியிருக்கிறதுபோலும்; என்று

எண்ணி, "பரமபிதா சாட்சியாக, இன்றுமுதல் என் சொத்துக்கள் யாவும் உன்னைச் சேர்ந்தவை" என்று கூறி ஆசிர்வதித்தான்.

காட்டில் அலைந்து, களைப்புற்று, வேர்க்க விறுவிறுக்க தகப்பனிடம் வந்தான் ஈசா. "தந்தையே, ஈசா வந்திருக்கிறேன், சொத்துக்கள் எங்கே?" என்ருன். "மோசம்போனேன்; மகனே! உன் தம்பி உன்னைப்போலவே வேஷம்போட்டு என்னிடமிருந்து சொத்துக்களை வாங்கிச் சென்ருன்" என்ருன். ஈசா மனங்குன்றி நின்ருன். வெற்றிச் சிரிப்பு சிரித்தான் யாக்கோப்.

சிறிது நாட்களில் தன் மாமா ஊருக்குச் சென்ருன், ஒட்டகைகளில் திரவியங்களை ஏற்றிக்கொண்டு. மாமனுக்கு மகளிருவர். பெரியவள் பெயர் லேஞ. சாதுவான பெண். இளையவள் மிகவும் அழகி. ரபாசா என்னும் பெயர் கொண்டவள். அவளது குறுகுறுப்பான பார்வையும், முகவெட்டும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தி அடிமைகொள்ளும் தன்மையுடையன. யாக்கோப், அவள்மேல் காதல்கொண்டான் என்று சொல்லவும் வேண்டுமா? இவர்களது காதல் விளையாட்டு மாமனுல் தடை செய்யப்பட்டது. யாக்கோபிற்கு இது பொறுக்க முடியாத கஷ்டமாயிற்று. ஒருநாள் மாமனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். மாமன் சிரித்து, தம்பி, யாக்கோப், ரபாசாவைக் கல்யாணம் செய்ய உனக்கு விருப்பமிருந்தால் ஒரு நிபந்தனையுண்டு. அதன்படி நடக்க, உனக்கு சம்மதமானுல் நீ அந்த விஷயத்தில் சிரத்தை கொள்ளலாம் என்ருர்.

யாக்கோப், கஞ்சி வரதப்பா என்றால் எங்கு வர தப்பா என்ற மாதிரி "என்ன நிபந்தனை, சீக்கிரம் கூறுங்கள்" என்றான். அந்த நிபந்தனை "நீ எதிர் பார்ப்பதுபோல் அவ்வளவு சுலபமானதன்று" எனவும், யாக்கோப் பொறுமை இழந்து, "மாமா, எது வானால் என்ன? கடலைத் தாண்டவேண்டுமா? வானில் பறக்கவேண்டுமா? மலையைப் பெயர்க்க வேண்டுமா? காதற்பெண்ணின் கடைக்கண் பார் வைக்குமுன்பு, இதெல்லாம் எம்மாத்திரம்? அவள் காதலைப் பெற எந்த நிபந்தனையையும் ஏற்பேன்." மாமன், "சரி நீ இத்தனை நேரம் சொன்ன அருஞ் செயல்கள் ஒன்றும் செய்யவேண்டாம். எனது பெரிய பெண் லேஞவை முதலில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அவளுடன் பத்து வருஷம் வாழ்வு நடத்தவேண்டும்; அமைதியான மனத்தோடு பின்பு இவளை மணந்துகொள்ளலாம்" என்றார். இதைக் கேட்ட யாக்கோப் வியப்புற்றான். என்ன வேடிக்கை! நான் தமையனை மோசம் செய்து பொருளை அடைந்தேன். என் காதலியோ தமக்கைக் காக ஒரு தியாகம் செய்யத் தயாராயிருக்கிறாள்; தன் காதலனையே தமக்கைக்குத் தானம்செய்கிறாள்.

என் காதலி வெறும் ரூபஸெளந்தரியம் மட்டும் பெற்றவள் அல்ல. அழகிய குணங்களின் பிரதி பிம்பம். இவ்வாறு மனத்தில் வியந்தவனாய் "மாமா அப்படியே தங்களிஷ்டம்போல் செய்கிறேன்" என்று லேஞவை மணந்துகொண்டான். மனத்திற் கொவ்வாத பெண்ணுடன் பத்து வருட வாழ்க்கை நடத்தினான் யாக்கோப். அவன் மன மாசு அகன்றது. பின்பு இளையவளையும் மணந்துகொண்டான். மனம் திருந்திவிட்டதனால் அக்காள், தங்கை இருவ

ரையும் ஒரே வடிவம் போல் யாக்கோப்பின் கண்களுக்குத் தோன்றியது. இப்போது தன் அண்ணனை நினைத்து அகம் உருகினான். அவனுக்குச் சேரவேண்டிய முதற் பாகமாகிய சொத்தைத் தான் அனுபவிப்பது அவனுக்குப் பெரும் பாரமாய்த் தோன்றியது. லேயா, ரபாசா இருவரையும் அழைத்துக்கொண்டு, அண்ணனிடம் வந்து வணங்கினான். தம்பியை மார்போடு அணைத்துக்கொண்டான் ஈசா. அண்ணா, தலையிருக்க, வால் ஆடுமா? எங்களுக்கெல்லாம் தலைவராயிருந்து காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அண்ணனும் அவ்விதமே செய்தான்". இவ்விதக் கதைகள் எத்தனையோ— எங்கள் 'ஸார்' எங்களுக்குக் கூறி, நற்குணங்களை செவியின் வாயிலாக மனத்தில் புகவைத்திருக்கிறார்.

6. ஊரைப் பிரிதல்

பெரியம்மா காசிக்குப் புறப்பட்டாள். வீட்டில் பிரயாணத்திற்கு சாமான்கள் தயார்செய் தார்கள். என்னையும் தன்னோடு அழைத்துச்செல்ல வேண்டுமென்று பெரியம்மா விரும்பினாள். தாத்தா வும், மாமாவும் முடியாது என்று சொன்னார்கள். பெரியம்மா மிகவும் துக்கப்பட்டாள். அவளை எப் படி சமாதானம் பண்ணுவது என்று மற்றவர்களுக் குத் தெரியவில்லை. அவள் ஏற்கனவே துர்ப்பல மானவள். அதோடு வருத்தமும் ஏற்படவே, தேக நிலை மிகவும் கேவலமாய்விட்டது.

தனக்குக் குழந்தையில்லாததினால் மனம்வருந்து கிறாளே என்று தாத்தா அவளை சமாதானம் செய்ய லானார். "பார்வதி! ஊரார் குழந்தையை அழைத் துச் சென்றால் உனக்கு என்ன பிரயோஜனம்? கடவுள் கிருபையால் கூடிய சீக்கிரம் உனக்கு புத் திர பாக்கியமுண்டாகும்." மாமா இதைக் கேட்டு, "என்ன அண்ணா இப்படிச் சொல்கிறீர்கள்? நம்மவீட்டில் வித்தியாசம் பார்க்கும் வழக்கம் இடையாது! குழந்தையை வளர்ப்பதற்கு யாரானால் என்ன? பார்வதியானால் என்ன? செல்லம்மா வானால் என்ன? நம்ம வீடே ஒரு குடியரசு என்று எத்தனையோ தரம் தீர்மானித்திருக்கிறேனே. "அது சரி அப்பா, குழந்தையை தூரதேசத்திற்கு அழைத் துச் செல்ல முடியுமா? பாரதிக்கு அது சம்மத

மாகாது" என்றார். கடைசியில் மாமாவும், பெரியம்மாவும் அங்கே என்னையும் அழைத்தே செல்வது என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

எனக்கும் காசி போவது பிரியமாய்த்தானிருந்தது. நாங்கள் புறப்பட்டோம். வழியனுப்பும் வைபவம் மிகவும் நன்றாய் நடந்தது. காசி மிகவும் தூரதேசமானபடியால் கிராமத்தார் யாவருமே வண்டியின் பின்னால் நடந்து வந்தனர். கடைசியில் என் பாட்டி, கண்ணீர் ஆறாகப் பெருக அன்புடன் என்னை அணைத்துக்கொண்டு "கண்ணே, பெரியம்மாவை கஷ்டப்படுத்தாமல் சமத்தாயிரு" என்று ஆசிர்வதித்து விடையளித்தாள். பாட்டியின் உணர்ச்சி மிகும் முகத்தை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை. ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றது. குபுக், குபுக் என்று இன்ஜினிலிருந்து புகை கிளம்புவதும், இரைச்சலிடுவதும், என்னைப் பரபரப்புக் கொள்ளச் செய்தது. ரயிலும் புறப்பட்டது. நண்பர்களும், பந்துக்களும் சேர்ந்து நின்றனர். ரயில் ஓடும்போது எங்களூர் மலைகளும், மரங்களும் ஓடுவதைப்போல் தோன்றியது. என் தலையும் சுழன்றது. எங்களைக் காசிக்கு அழைத்துச் செல்லும், என் அத்தையின் கணவர் என்னைச் சமாதானப்படுத்த முயன்றார். நல்லவேளையாக ஒரு சிறு பெண் ரயில் பாட்டுப் பாடினாள். அந்தப் பாட்டு என் கவனத்தைத் தன்னிடம் இழுத்தது. ரயில் ரோடு போடும் ஆரம்ப விழாவை மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் நடத்திய நிகழ்ச்சியும் பின்பு ரோடுபோட்ட வைபவமும் அவள் பாடிய அந்தக் கண்ணிகளில் வருகின்றன.

7. பட்டணப் பிரவேசம்

நாங்கள் சென்னையை அடைந்தோம். சென்னையிலிருந்து பம்பாய் மெயில் இரவு புறப்பட்டது. எனக்கு அதுவரை உற்சாகமாய்த்தானிருந்தது. ஆனால் சென்னையைப் பிரியும்போது மனதில் ஏதோ ஒரு ஏக்கம் புகுந்தது. மூன்று தினங்களுக்கு வேண்டிய போஜன பதார்த்தங்கள் எங்களிடமிருந்தது. பம்பாயில் ஒரு நண்பர் வீட்டில் இறங்கினோம். ஒரு மாதம் பம்பாயைச் சுற்றிப் பார்த்தோம். ஒவ்வொரு நாள் ஒவ்வோரிடமாக. என் மனத்திற்கு எல்லா விஷயங்களும் புதியவைகளாகத் தோன்றும். ஸ்டவ் அடுப்பு, பம்பாய் சால் என்ற சிறு வீடு, ஒவ்வொரு வீட்டிலும் எண்ணற்ற பேர்கள் குடியிருப்பது, எங்கு பார்த்தாலும் பயாஸ்கோப். (அந்த நாட்களில் சினிமா என்ற பேர் சொல்லப்படுவதில்லை. பயாஸ்கோப் என்பார்கள்.) பயாஸ்கோப்-நாடகக் கொட்டகைகள், தேநீர்க் கடைகள், ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவிற்கும்கூட ரயில்! இதெல்லாம் எனக்குப் பெரிய வியப்பை அளித்தன. எனக்கும் அங்கு சென்றவுடன், குஜராத்திக் குழந்தைகளைப் போல அலங்காரங்கள் செய்துவைத்தார் பெரியம்மா.

பம்பாயில் தினம் தவறாமல் இரவு நாடகத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது. காரணம் என்னவென்றால்

ருல் நடிப்பு அங்கு தத்ரூபமாக உண்மையைப் போலவே இருக்கும்! நாடகத்தில் பெரும்பாலும் ராஜாக்கள் ஏதாவது ஒரு பெண்ணை பலாத்காரமாகச் சிறையில் அடைத்து வைப்பதும், அவளைச் சித்திரவதை செய்வதுமாய் இருப்பார்கள். அந்தக் கட்டங்களை, என்னுல் பொய் நாடகம், நடிப்பு என்று எண்ணமுடியாது. நிஜமென்றே எண்ணிக்கொள்வேன். எனக்குத் தங்கவே மனங்கொள்ளாது. ஆனுல் வெளியே சொல்லப் பயமும், சங்கோஜமும் என்னை வாட்டும். அதனுல் நாடகம் முடியும்வரை கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். அப்போது பம்பாயில் நம் தென்னிந்தியர் அதிகம் கிடையாது. யாராவது ஓரிருவர்தான் மதராஸியாக இருப்பார்கள். கூட்டத்தில் குஜராத்திகளும், மராட்டியரும், ஹிந்துஸ்தானிக்காரருமாயிருப்பார்கள். தலைப்பாவுந் தலையுமாக, ஆஜானுபாகுவாகத் தோன்றும் அவர்களையும், 'காரே, மூரே' என்று தோன்றும் அவர்கள் பாஷைகளையும் கேட்கும் போதும் நான் பயப்படுவேன். பம்பாயில் மகாலக்ஷ்மி கோயிலும், சமுத்திரக்கரையும்தான் என் மனதிற்குச் சாந்தியளித்த இடங்கள். கிராமத்திலுள்ள காளை மாட்டை பட்டணத்தில் வண்டி இழுக்க வைத்தால் அது மோட்டாரைக் கண்டதும் மருண்டு ஓடுவதும், புல்லும், தண்ணீரும் அருந்தாமலிருப்பதுவும் சகஜமல்லவா? தந்தையாரே ஒருசமயம் கூறியிருக்கிருர். அவர் காசியிலிருந்து வரும்போது மலேரியா ஜுரம் ரொம்ப அதிகமாகிவிட்டதாம். எப்போதும் தயாராய்க் கொயினு மாத்திரைகளை வைத்திருப்பார். வாந்தியெடுப்பதும், கொயினுவை விழுங்குவதுமாக

கஷ்டப்பட்டாராம். பசியும், அசதியும் அவரை வாட்டின. முகல்சராய் ஸ்டேஷனில், மதராஸி ஒருவனைத் தற்செயலாகக் காண நேர்ந்ததாம். அவனைக் கண்டவுடன், சொந்த சகோதரனைக் கண்டது போல் தோன்றியதாம். "அப்பா, கொஞ்சம் ரஸம் சாதம் போடு. இல்லாவிட்டால் உயிர் போய்விடும்" என்றார். அவனும் ஹோட்டலிலே பணி செய்பவனுகையால் சாதமும், ரஸமும் கொண்டு வந்து கொடுத்தான். தந்தையாருக்கு, அந்தச் சமயத்தில் அவனுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று தோன்றாமல், "இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்தால், உடனே உனக்குத்தான் உயர்ந்த பதவி அளிக்கச் செய்வேன்" என்று கூறி அவனைத் தழுவிக்கொண்டார். அவனும், மிகவும் அன்போடு, "ஸ்வாமி, நான் இந்த ஸ்டேஷனில் எத்தனையோ பேர்களுக்கு உதவி செய்திருக்கிறேன். ஆனால், தங்களைப்போல் நன்றியறிவும், அன்பும் கொண்டவர்களை இதுவரை பார்த்ததில்லை. தாங்கள் கூறுவதைப் பார்த்தால் காங்கிரஸில் தங்களுக்கு உயர்ந்த பதவிபோல் தோன்றுகிறதே" என்றான். தந்தை வியப்போடு, "ஆகா! வெறும் சமையல் தொழிலிலும், உதார குணத்திலும் மட்டும் தாங்கள் சிறந்தவர் என்று நினைத்திருந்தேன். இப்போது அரசியல் ஞானமும் அதிகம் படைத்தவர் என்று தெரிகிறது.

தாங்கள் நினைக்கிறபடி நான் பெரிய பதவி ஒன்றும் வகிப்பவனல்ல. பாரத மாதாவின் ஊழியன் நான்" எனவும், அவன் "ஸ்வாமி, தாங்கள் சாதாரண மனிதராக எனக்குத் தோன்றவில்லை. ஸ்ரீராமர்

அரசைத்துறந்து காட்டிற்குப்போன சமயத்திலும் கூட, சீதையைப் பிரிந்து, சீரழிந்து, உடல் வாடி துயரமுற்ற சமயத்திலும் கூட, அநுமார் சீதாதேவி யாரிடமிருந்து சூடாமணியைக் கொணர்ந்து கொடுத் தவுடன், அநுமாருக்கு எதைக்கொடுப்பது என்று தெரியாமல் சிறிது மயங்கிப்பின்பு தெளிந்து, நிலை யாப்பொருளாகிய செல்வங்களை இவனுக்குக் கொடுப்பதில் பயன் என்ன? இவனையே என்றும், காருள்ளளவும், கடல் நீருள்ளளவும், இந்தப் பாருள்ளளவும், பஞ்சபூதமுள்ளளவும் நிலைத் திருக்கச் செய்வேன் என்று, என்றும் சிரஞ்சீவியா யிருக்க ஆசிர்வதித்தாராம். பெருந்தன்மை கொண்ட மனிதர்கள் எந்த நிலையிலும் தானத்தைச் செய்யப் பின்வாங்கார்கள். தாங்கள் பேசுவதிலிருந்து இந்திய சுயராஜ்யத்தில் தங்களுக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறதென்று நன்ருய்த் தெரிகிறது. சுயராஜ்யம் வந்ததும் சுயம்பாகியான எனக்கு அதில் முதல் பதவியைக்கொடுப்பேன் என்று எவ் வளவு தாராளமாகக் கூறினீர்கள். ஆயிரம் பொன் கொடுத்தாலும், எனக்கு இத்தனை திருப்தி உண்டா காது'' என்ருன். தந்தை ஆச்சரியக்கடலில் மூழ்கி ஞர். எதற்கு இந்தச் சம்பவத்தைக் கூறவந்தே னென்ருல் அந்நிய நாட்டில் நமது நாட்டினரைச் சந்திக்கும்போது, மட்டில்லா மகிழ்ச்சியும் அன்பும் ஏற்படும்என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான்.

8. காசியா? காட்சியா?

பம்பாயிலிருந்து புறப்பட்டுக் காசி சேர்ந்தோம். "காசி வந்துவிட்டது எழுந்திரு'' என்று எழுப்பினர், என் அத்தையின் புருஷன். திடுக்கிட்டுக்கண் விழித்தேன். அப்படியே கற்பனையிலாழ்ந்தேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒரே இருட்டு ; காற்று சில்லென்று வீசியது. 'ஓகோ, கங்கையின் மேல் ரயில் போகிறது போலும்; அதுதான் இத்தனை குளிர்' என்று எண்ணிக்கொண்டேன். நமக்கு ஒரு பொருளை பார்க்குமுன்பு இருக்கும் ஆவல் பார்த்தபின் இருப்பதில்லை. பெரியம்மா சொல்லியிருப்பவைகளைக் கொண்டு காசியை மனக்கண் முன்பு நிறுத்திக் கொண்டேன். பள்ளிக்கூடத்தில் சேரவேண்டும்; சம்ஸ்கிருதம் படிக்கவேண்டும் என்றெல்லாம் மனக் கோட்டை கட்டினேன். காசி ஸ்டேஷனுக்கு ரயில் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே எழுப்பினர் அத்திம்பேர். அந்த ஒரு மணி நேரமும் கண்ட இன்பக்கனவு, அந்த சுகம் பின்பு ஒருகாலத்திலும் எனக்கு ஏற்படவில்லை.

விடியற்காலை நாலுமணி என்று நினைக்கிறேன். இப்போது நேரம் சரியாக ஞாபகமில்லை எனக்கு. எதிர்பார்த்த காசி ஸ்டேஷனும் வந்தது ; சாமான்களை இறக்கி, நாங்களும் இறங்கினோம். 'அத்திம்பேரே, வண்டி எங்கே?' என்றேன். பின்பு வண்டி

யைப்பார்த்தேன். என்ன வேடிக்கை! "அரே எக்கா இதர் ஆவ்" என்ருர் அத்திம்பேர். நாலு கம்பை வைத்துக்கட்டி ஸ்வாமி சப்பரம்போல் தோன்றிய எக்காவில் ஏறவே எனக்குப் பயமாயிருந்தது; தூக்கி, மடியில் உட்காரவைத்துக்கொண்டார். வீடு வந்தோம். எனது அத்தையும், என் தந்தையாரின் அத்தையும், எங்களை வரவேற்றனர்.

பெரியப்பா எப்படி ஸ்வபாவம் உள்ளவரோ என்று யோசனை செய்து கொண்டிருந்தேன்; சாந்தமே ஒரு உருக்கொண்டதுபோல் தோன்றிய அவரைக்கண்டதும் என் பயமெல்லாம் பறந்துவிட்டது. தருமபுத்திரர், சாந்தசீலர் என்று புத்தகத்தில் படித்திருந்தேன். பெரியப்பா பிரத்யக்ஷ தரும புத்திரர் என்று எனக்குத்தோன்றியது. அதே விதமான சாந்தரூபத்தை, நமது தலைவர் ராஜேந்திர பாபுவின் முகத்தில் தான் கண்டேன். சிட்டுக்குருவி போல் உற்சாகமாயிருந்தேன்,

சிவமடம் மூன்று மாடிக்கட்டிடம். பின்புறம் விஸ்தாரமான தோட்டம். வீட்டில் சுமார் 50 அறைகள் உண்டு. வீட்டின் முன் பகுதியில் சித்தேசுவரி கோவில். அவளது கணவர் சித்தேசுவரரும் அருகிலிருக்கிருர். சித்தேசுவரர் முன்னுல் காவல் புரியும் நந்தி, மிக அழகிய தோற்ற முடையவர். வழ வழ வென்று அழகிய உடலும், நிமிர்ந்திருக்கும் கொம்புகளும், அன்பு ததும்பும் கண்களும் (ஆமாம்; மாட்டின் கண்ணில் தான்) கொண்டவர். மற்ருெரு அதிசயம் என்னவென்ருல் மற்ற நந்தியார்களுக்

இல்லாத சிறப்பு ஒன்று அவரிடம் உண்டு. முதுகில் வேலைப்பாடமைந்த ரத்ன ஜமக்காளம் போர்த்தி இருப்பதைப்போல், சிற்பி அபாரமாய் வேலை செய்திருப்பது; அது தையல் வேலையில் சிறந்த வேலைக்காரர்களால் தைத்ததைப்போல், படிப்படியாகவும், அடுக்காகவும், கட்டங்கள் அமைத்தது போலிருக்கும். சித்தேசுவரி அம்மன் அதில் உட்காரும்போது இந்த மெத்தை எத்தனை சுகமாயிருக்கும் என்று எண்ணிக்கொள்வேன். தினமும் காலை, மாலை பூஜை முறையாக நடக்கும். பெரியப்பா, அல்லது அத்திம்பேர் பூஜை செய்வார்கள். நாங்கள் தான் பூஜாகைங்கரியம் முழுதும் செய்வோம். கூலி வேலை செய்வோர்களைக்கொண்டு, பூஜை கைங்கரியங்களை நடத்தக்கூடாதென்பது அவர்கள் தந்தையார் உத்திரவு. (அதாவது ஸ்ரீ. கிருஷ்ண சிவன் அவர்கள் என் தந்தையின் அத்தையின் கணவர்.)

அம்மனிடம் கோலம் போடுவது, மாலை தொடுப்பது, தீபாராதனையின் போது ஜயகண்டி அடிப்பது முதலியன எனது பணிகள். எனக்குத் தன்னையறியாமலே அம்மனிடம் ஒரு ஈடுபாடுண்டாயிற்று. அவளை ஒரு விளையாட்டுத்தோழியாக எண்ணினேன். மடத்தில் என்னைத்தவிர வேறு குழந்தைகள் கிடையாது. பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். "அன்னி பெஸன்ட்" அம்மையார் ஏற்படுத்திய ஹிந்து காலேஜில் விரைவிலேயே ஹிந்தி பேசக் கற்றுக்கொண்டேன். காசி கோஷா நாடானபடியால் பள்ளிக்கூடத்திற்கு வண்டி வைத்தே அழைத்துச்செல்வார்கள். படிப்பில் என் ஆவலைப்பார்த்து

"படி ஹிந்தி" அதாவது முதல் வகுப்பில் சேர்ந்துக் கொண்டார்கள். எத்தனைக்கெத்தனை ஹிந்தி பாஷையைக் கண்டு முதலில் பயப்பட்டேனே, அத்தனைக்கத்தனை இப்போது அது மிகவும் நயமான பாஷை என்பது புலனாயிற்று.

அலங்காரத்தில் ஹிந்துஸ்தானியர் நிரம்ப விருப்பங்கொண்டவர்கள். காலில் எப்போதும் பெண்கள் செம்பஞ்சுக் குழம்பினால் அலங்கரித்துக் கொள்வார்கள். மருதாணி இட்டுக் கைகளையும், கால்களையும் செந்தாமரை மலரைப்போல் வைத்துக் கொள்வார்கள். நெற்றியில் சிந்தூரம் என்ற அழகிய குங்குமப்பொட்டு. கை நிறைய வளையல்கள். வளையல்களில் அநேக விதம். நம் ஊரில் அந்த மாதிரிகள் அகப்படா. அரக்கினால் செய்த கங்கணம். கங்கணத்தினழகு பார்ப்பவர் கண்களைப் பறிக்கும். கங்கணத்திலும் அநேக விதம். பட்டாடை ரகமோ கேட்கவே வேண்டாம். காசி பீதாம்பர நாடல்லவா? எங்கள் பள்ளிக்கூடத்தில் இருபது வயதான பெண்களும் படித்தார்கள். ஒவ்வொரு பெண்ணும் அழகில் ரதியையும், லக்ஷ்மீதேவியையும் தோற்கடிப்பார்கள். தலையில் முக்காடிட்டிருப்பார்கள்; விளையாடும் சமயத்தில் தலையிலிருந்து துணி நழுவும்போது, அவர்கள் அழகு நன்கு புலப்படும். நான் எப்போதும், இப்படியே இருந்தால் என்ன என்பேன். அவர்கள் தலையைத் திறப்பது எங்கள் வழக்கத்திற்கு விரோதம் என்பார்கள், ஹிந்துஸ்தானிப் பெண்கள் மற்ற எல்லா அலங்காரத்திலும் சிறந்தவர்களாயிருந்தாலும், தலைபின்னிச் சிங்காரிப்பதில் கெட்டிக்

காரர்களல்ல. வித விதப் பின்னல்களும், பின்னலில் பூ தைப்பதும் அங்கு கிடையாது. என் தலைப் பின்னலையும், பூவையும் பார்த்து, அவர்கள் மிகவும் ஆச்சரியப் படுவார்கள். தங்களுக்கும், என்னைப் போல் தலைபின்னச் சொல்வார்கள். இந்த விதமாக எனக்குப்பள்ளிக்கூடத்தில் எல்லாப்பெண்களும், சிநேகிதைகளாக ஆகிவிட்டார்கள்.

அவர்கள் பெயரும் உருவத்தைப்போலவே அழகானவை. ஹேமலதா, ஸ்நேகமலி, மிருணாலினி, கமலினி, உஷாப்ரபா, இந்துமதி, சந்திரலேகா என்றிருக்கும். சில நாட்களில் காசியிலுள்ள தென்னாட்டுப் பெண்கள் சிலரும் அதே பள்ளியில் சேர்ந்தனர். லட்சுமியும், கோமதியும், அலர்மேலுமங்கையும், சுப்புலட்சுமியும் நமது பெண்களிடம் வந்ததும் எச்சி, கோமு, சுப்பு என்று சுருங்கி விடுகிறார்களல்லவா? நமது பெண்கள், பள்ளிக்கூடத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்போது, நம்நாட்டுப் பெயர் காதிற்கு ருசிக்கவில்லை என்று அலமேலு, கலாவதி என்றும், சுப்புலக்ஷ்மி சுபாஷிணி என்றும், பெயரை மாற்றி வைத்துக்கொண்டனர். நான் என் பாட்டியார் பெயராகிய லக்ஷ்மீ என்பதையே, லக்ஷ்மிபாய் என்று கொடுத்திருந்தேன். ஏதோ ஒரு விளையாட்டிற்காக அவரவர் தந்தையார்களிடமிருந்து, ஒரு பாரத்தில் கையெழுத்து வாங்கி வரச்சொன்னார்கள். தகப்பன்மாருக்கு. பெண்கள் செய்திருக்கும் வேலை தெரியாதானபடியால், சுப்புலக்ஷ்மி, அலமேலு என்ற பெயரை அதில் எழுதினார்கள். உடனே தலைமை உபாத்தியாயனி என்னைக்கூப்பிட்டு இந்த விஷயத்தை விசாரித்தார். நான் பெயர் மாறிய ரகசியத்தைச்சொன்னதும், உபாத்தியாயனி விழுந்து விழுந்து சிரித்தார்.

9. பெயர் மாற்றம்

தாய் தந்தையர் இட்ட பெயர்களை, தாய் நாட்டுப் பெயர்களை மாற்றிக்கொண்ட சுப்புலக்ஷ்மியையும், அலமேலுவையும் பார்த்து, காசி ஹிந்து காலேஜ் தலைமை உபாத்தியாயனி இவ்விதம் கூறினார். மதராஸிகளுக்கு எப்போதுமே தாய்நாட்டபிமானம் குறைவு. இது மிகவும் வெறுக்கத்தக்கது. எங்கள் நாட்டுப் பெண்களானால் ஆயிரம் பொன் பெறுவதானாலும்கூடத் தன் பெயரை மாற்றிக் கொள்ளச் சம்மதிக்க மாட்டார்கள்.

ஒரு கதை கூறுகிறேன் கேளுங்கள்:—ஓர் காக்கை, மயிலையும் அதன் தோகையையும் கண்டு ஆசைப்பட்டது. ஒரு நாள் அது பின்வருமாறு எண்ணமிட்டது: 'நானும் மயிலைப்போலத்தான் இருக்கிறேன். அது சற்றுப்பச்சை; நான் கறுப்பு. அவ்வளவுதானே. இறக்கைதான் எனக்குவேண்டும்' என்று நினைத்தது. ஒவ்வொன்றாகக் கீழே கிடக்கும் மயில் இறகுகளைச் சேகரித்தது. தனது இறக்கையில், அந்த இறகுகளைக் குத்திக்கொண்டது. மயில் கூட்டத்தின் நடுவில் அதுவும் போய், ஒய்யாரமாக நடந்து சென்றது. மயில்கள் யாவும், இதைக்கண்டு சிரித்து ஏளனம் செய்தன. பின்பு எல்லாம் சேர்ந்து கொண்டு, இறக்கைகளைக் கொத்தி இழுத்து அவமானம் செய்தன. மயில்களால் கொத்தப்பட்டுப்

புண்பட்ட காக்கையை, காக்காய்க் கூட்டமும் தங்களோடு சேர்க்க மறுத்துவிட்டன. காக்கை தனியே துணையின்றித் தவித்தது. அந்நியன் அழகாயிருந்தாலும் நமக்கு உதவுவானா? என்றார். நான் உடனே "குருஜி! எங்கள் தமிழிலும் இதுபோன்ற கருத்துடைய பாட்டு இருக்கிறது" என்றேன். குருஜி 'சொல் கேட்போம்' என்றார்.

"கான மயிலாடக்
கண்டிருந்த வான் கோழி
தானு மதுவாகப்
பாவித்துத் தானுந்தன்—
பொல்லாச் சிறகை
விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி"

என்று பாடிக்காண்பித்தேன். அதைக்கேட்டு குருஜி "தமிழ்ப் பாட்டு பகுத் அச்சா ஹை!" என்று புகழ்ந்தார்.

காசியில் எங்கு பார்த்தாலும் சிவலிங்கம் காணலாம். பகவத்பாத சங்கராச்சாரியார் அவர்கள், காசிக்குச் சென்ற சமயம், அந்த சிவலிங்கங்களைப் பார்த்து "காசி முழுவதும் லிங்காகாரமாய்த் தோன்றுகிறதே! எப்படி லிங்கங்களைக் காலினால் மிதிக்கிறது" என்று யோசித்தாராம். உடனே அவரது காதில், எங்கு இல்லை? லிங்கத்தில் மட்டுமா இருக்கிறேன். மற்ற இடத்தில் நான் இல்லையா? என்று யாரோ கேட்பது போல் தோன்றியதாம். காசியைப் புண்யபூமி என்று புகழ்வது மட்டும் போதாது;

கலாபூமி என்று கூறினாலும் போதாது. நமது சகல சாஸ்திர புராணங்களுக்கும் ஆதாரமாக அங்கு கோயில்களும், கல்வெட்டுக்களும் இருக்கின்றன. எத்தனை பாபம் செய்தவர்களும், கங்கா ஸ்நானம் செய்து பாபம் தீர்ந்து, பரிசுத்தமடைந்து கடைத்தேறுவார்கள் என்று கூறுவது கற்பனை என்று தோன்றவில்லை; முழு உண்மை. காசிக்குத் திரளான யாத்திரிகர்கள் வருவார்கள். ஒவ்வொரு மடத்திலும், அவர்கள் பாவத்தைப் போக்கி, பிதுர்க் கடன்களை யாற்றி கடமையைச்செய்யும் காரியங்களை மும்முரமாக மடத்தலைவர்கள் செய்விப்பார்கள். முதலில் சங்கல்பம் நடக்கும். அந்த மந்திரங்கள் என் மனத்தில் சில எண்ணங்களை எழுப்பிவிடும்.

'ஜம்பூத்விபே' என்றதும், எண்ணமுடியாத தூரம் வரை நாவல் மரங்கள் செறிந்து நிற்பதும், 'பரதக்கண்டே' என்றதும், துஷ்யந்தனால் நிராகரிக்கப்பட்ட சகுந்தலை தன் பிள்ளை பரதனோடு காட்டில் தனியாக வசிக்கும் துன்பக்காட்சியும் தோன்றும்; உடனே அது குறைந்துவிடும். இளம் பிராயத்தில் துன்பந்தோய்ந்த வாழ்க்கையில் வளர்ந்த பிள்ளை, வாலிபத்தில் தேசம் உள்ளவரை தன் பெயரை நிலை நாட்டத் தகுந்த வீரப்பிரதாபம் நிறைந்தவனாக விளங்கிய பெருமையையும், அத்தகைய சகுந்தலையைப் போன்ற வீரத்தாய்மார் அநேகரை ஈன்ற பாரத மாதாவின் சிறப்பையும் எண்ணி ஆனந்தத்தில் ஆழ்ந்து விடுவேன். 'மேரோ தக்ஷிணே பார்சே' என்னும் போதே நாட்டைப் பற்றிய என் பெருமையும் மகாமேருவைப் போல் உயர்ந்துவிடும். எங்கள்

மடத்திற்குப் பின்புறம் அரிச்சந்திரக் கட்டம் (சுடுகாடு) இருக்கிறது. அங்கு எப்போதும் பிணங்கள் எரிந்துகொண்டிருக்கும். எங்கள் வீட்டு மூன்ரும் மாடியிலிருந்து பார்த்தால் சுடலைத்தீ கண்களுக்கு நன்ருகத் தெரியும். அரிச்சந்திர பஜார் என்ெருரு கடைவீதியும் காசியில் உண்டு. 'காலகண்டன் வீடு' என்று இப்போது ஒரு வீட்டைக் காண்பிக்கிருர்கள். பக்தர்கள், கற்புக்கரசி சந்திரமதியும், குழந்தைகளில் நக்ஷத்திரம் என்று சொல்லக்கூடிய லோகிதாசனும் இருந்து தர்மப்பணி செய்த அந்த வீட்டு வாசலிலிருந்து மண்ணை எடுத்துத் தலையில் போட்டுக் கொள்வார்கள். ஓர் நாள் நான் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது "ராம நாம சத்ய ஹை" என்று சத்தம் கேட்டது. ஒரு பிணத்தைத் தூக்கிச் சென்ருர்கள். "மற்றதெல்லாம் பொய், ராம நாமமே உண்மை" என்ற விஷயத்தைப் பிணம் தூக்கிகள் சொல்கிருர்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். "பிறவா வரம் தாரும் பெம்மானே—பிறந்தால் இறவா வரம் தாரும்" என்று பக்தர்கள் உருகுகிருர்கள். 'காசியில் எம்பெருமான் இறப்பவர் காதில் தாரக நாமத்தை உபதேசித்து பிறவா வரம் அருளுகிருர்' என்பார்கள்.

பனிக்காலத்தில் காசியில் குளிர் தாங்கமுடியாது. வேனிற்காலத்திலோ வெயில் தாங்கமுடியாது! அதனுல் தான் 'காசி வாசமோ ஊசி வாசமோ' என்கிருர்கள். நாங்கள் வெயிலில் மொட்டை மாடியில் உட்கார்ந்திருப்போம். அங்குள்ள குரங்கு

களும் தங்கள் குழந்தைகளை அணைத்தவாறு, சாலை யின் வெயிலின் காட்சிகளை அனுபவித்து, கண் சிமிட்டி ஆனந்திக்கும். இரவில் யாவரும் கணப்புச் சட்டியருகில் துயில்வோம். எங்கள் வீட்டுக்கடுத்த வீட்டில் ஒரு வேப்பமரமுண்டு. அது தன் நிழலை எங்கள் மொட்டை மாடிக்குக் கொடுக்கும். அந்த வேப்பமரத்தில் அநேக குரங்குகள் சம்சார சகித மாகக் குடியிருந்தன. அவைகளின் வாழ்க்கை விநோதத்தை அறிய மேற்கண்ட மரம் எனக்கு மிகவும் உதவியா யிருந்தது.

காசியில் அலங்காரப் பொருள்கள் அதிகம். எனக்கு அவைகளைப் பார்ப்பதில் அளவிலா ஆனந்தம். குச்சிலிப் பொட்டு—அதன் அழகை என்ன வென்று சொல்ல? நடுவில் கறுப்பு. சுற்றிலும் தங்க விளிம்பு, சிவப்பு, பச்சை, முழுதும் தங்கம், அநேகவிதம். பாசிமணி, எத்தனை விதம்! ஸ்படிக மணிகள், தலையில் குத்திக் கொள்ளும் கொண்டைக் கிளிகள்; அந்தக் கிளிகளைப் பார்த்துக்கொண்டே நிற்கவேண்டும் என்று தோன்றும் எனக்கு. அனுமந்தக் கட்டத்திலிருந்து, விசுவேசுவரர் கோயி லுக்குப் போகும் வழியில் அநேகம் கடைகள் உண்டு. அவைகளில்தான் மரச் செப்புக்கள், பொம்மைகள், பித்தளை விக்ரகங்கள், பெண்கள் மூக்கில் அணியும் நத்துக்கள், சால்வைகள், தாவணி கள், பீதாம்பரங்கள் யாவும் பரப்பி வைக்கப்பட் டிருக்கும். தின்பண்டங்களோ, அப்பப்பா! தட்டுத் தட்டாய் மிட்டாய்களும், லட்டு வகையும் பேசின் களில் பாகில் ஊறி மிதக்கும் மிட்டாய் வகை,

எத்தனையோ முரப்பா—எத்தனை! சந்திக்குச் சந்தி பெரிய பெரிய இருப்புச் சட்டிகளில் பாலைக் காய்ச்சிக் கொண்டே இருப்பார்கள். கோவாவை, அங்கு 'மலாயி' என்பார்கள். ஒரு அணுக் கொடுத்தால், ஒரு மண்சட்டி நிறைய மலாய் கொடுப்பான். நம் ஊர் அளவுக்குக் கால் படி இருக்கும்.

பத்தாங் கடை. அதை தூரத்திலிருந்து பார்த்தால் வெள்ளைப் புஷ்பங்களைக் கூடையில் நிரப்பியிருப்பது போல் தோன்றும். ஆனால் அவைகள் சீனிப் பாகினால் செய்த வில்லைகள். உடைத்தால் உள்ளே வெறும் போலாயிருக்கும். அவல், பொரி இவைகளைக் கடையில் போர் போராகக் குவித்திருப்பார்கள். தயிரை, எந்த நேரத்திலும் சட்டி சட்டியாக, தெருக்களில் காணலாம். படிக் கணக்கில் அவர்கள் விற்பதில்லை. பாலை உறைத்து சட்டியோடு நம்மிடம் கொடுத்து விடுவார்கள் இடையர்கள். இப்படி எங்கு பார்த்தாலும் தின்பண்டங்கள் மலிந்து கிடக்கும். காசியைப் பார்த்தவர்கள் பசியும் தீர்ந்துவிடும். அங்கு பிச்சைக்காரரைக் காண்பதரிது. அஷ்டலக்ஷ்மியும் அங்கு வாசம் செய்கிறார்கள் என்பது நமக்குப் பிரத்யக்ஷமாய்த் தெரியும். நமது மகாராஜாக்கள் வேறு சத்திரங்கள் கட்டி, ஜனங்களுக்கு வயிறார போஜனம் அளிக்க, ஏற்பாடு செய்திருப்பதால், அங்கு பசித்தோரைக் காண்பதரிது. 'சத்திரா போஜனு, மடா நித்ரா' என்பது காசிப் பழமொழி.

10. லல்லு பாபு

காசியில் கவிஞராகிய எந்தையின் பிள்ளைப் பிராயம் கழிந்ததுபோல் எனது பிள்ளைப்பிராயமும் கழிந்தது. சிறு குழந்தைகளுக்கு எனவே காசி நகரைத் தோற்றுவித்தாரோ என்றே தோன்றுகிறது. இப்போது நினைத்தாலும் அவ்வூரை, அன்னபூரணியின் அருளமுதும், விசாலாக்ஷி தேவியின் இசையமுதும், விசுவேசுவரத்தின் உன்னதமான தோற்றமும், என் மனத்தை மகிழ்ச்சியிலாழ்த்துகிறது.

விசாலாக்ஷி தேவியின் ஆலயத்தினருகே அத்திம்பேரின் நண்பர் லல்லு பாபுவின் வீடிருந்தது. அவர் ஹிந்துஸ்தானி சங்கீத வித்வான்களில் ஒருவர். அப்போது ஹார்மோனிய வாத்தியம் பிரபலமாயிருந்தது. அந்த வாத்தியத்தை அவர் கையாளுவது அற்புதமா யிருக்கும். அவரது வாசிப்பைக் கேட்டால் "நாதந்தானது நாரதன் வீணையோ, நம்பிரான் கண்ணன் வேய்ங்குழலின்பமோ" என்று மயங்கிவிடும் வண்ணம் இருக்கும். மீராபாயின் பக்தி மிகுந்த கீர்த்தனங்கள், துளசிதாஸ், கபீர்தாஸ் போன்றவர்களின் பாட்டுக்களிலிருந்து தெருப்பாடகர்களின் பாட்டு வரை, லல்லு பாபுவுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. "டிராமாப் பாட்டுக்கள்" அப்பொழுது அக்ரஸ்தானம்

வகித்தன. புதுப்புது மெட்டுக்கள்; அவைகளைக் கேட்போர், உள்ளும் புறமும் நெக்குருகிப் புளகாங்கித மடைவார்கள்.

லல்லு பாபுவிற்கு மனைவி கிடையாது. பிரம்மசாரி என்று நினைக்கிறேன். அவரது தங்கையும், மற்றும் அவரது உறவினரும் வசித்தார்கள். அவ்வீட்டில் அவர்கள் கோஷாக்கள். அவரது தங்கை எப்போதும் துணிகளுக்குப் பூப் போடுவதிலும், ஜிகினா தைப்பதிலும் சரிகை தைப்பதிலும் ஈடுபட்டிருப்பார். பாபுஜீயோ, அநேக வித வாத்யங்கள் புடைசூழ, நண்பரோடு, உட்கார்ந்திருப்பார். அவரால் நடக்க முடியாது. "லைலி மஜ்னூன்" டிராமா அப்போது நடந்து கொண்டிருந்தது. அதிலுள்ள சோக ரஸமான பாடல்களை எனக்குச் சொல்லிக்கொடுப்பார். அதன் அடிகளைச் சொல்லும்போது ஒவ்வொரு தடவையும் எனக்குத் துக்கத்தினால் தொண்டை அடைத்துவிடும். சரியாகப் பாடமுடியாது. பாபுஜீயோ என்னைப் பார்த்து "அதனால் பரவாயில்லை, அனுபவித்துப் பாடினால் அப்படித்தானிருக்கும்" என்று தட்டிக் கொடுப்பார்.

லல்லு பாபுவுக்குத் தமிழ் கற்றுக் கொள்ள ஆசை. ஆனால் வாயில் தமிழ் நுழையவே செய்யாது. நான் அவருக்குத் தமிழ் பேசக் கற்றுக் கொடுக்கும் முயற்சி கடைசியில் வீணாகத்தான் முடிந்தது. "தங்கம்மா சாப்பிடுகிறாயா?" என்று கேட்பதற்கு அவர் படும் பாடு சொல்லி முடியாது. "தங்கம்மா

ஸாப்பிடம் கர்தி ஹோ" என்பார். ஒரு வார்த்தைக்கே இத்தனை அவஸ்தையானால், மற்றவைகளை விவரிக்கத் தேவையில்லை.

ஹிந்துஸ்தானிகள் தாகத்திற்கு நம்மைப்போல் வெறும் தண்ணீர் அருந்துவதில்லை. பனிக்கட்டி (ஐஸ்) போட்ட கங்கா ஜலத்தோடு, நறுமணம் பொருந்திய கலவை வஸ்துக்கள் கலந்து சாப்பிடுவார்கள். உபவாச விரத காலங்களைத் தவிர, மற்ற நாட்களில், நம்மைப்போல் ஏழ்மை உணவு உட்கொள்ள மாட்டார்கள். லட்டுவும், மிட்டாயும், பாலும், பழமும் தான் அவர்கள் உணவு. நானோ அதிகம் சர்க்கரை சேர்த்த தின்பண்டம் பிடிக்காதவள். வெங்காய சாம்பாரும், அப்பளமும், தேங்காய் சட்னியும், மெதுவடையும் சாப்பிட்டு வளர்ந்தவள். அதிலும் தந்தையாருக்குச் சாதமும், நெய்யும், தயிரும் 'ஸ்பெஷலா'யிருக்க வேண்டும். காசியில் நெய் நமது ஊர்க் கடை நெய் போன்ற பரிமளம் வீசும். நான் பாபுஜியிடம் சொல்வேன், தாங்கள் எங்கள் ஊறுகாய் வகைகளில் எத்தனை எடுத்துக் கொள்ளுகிறீர்களோ, அத்தனை மிட்டாய் நானும் எடுத்துக் கொள்கிறேனென்று.

"விசுவேசம், மாதவம், தொண்டிம், தண்டபாணிம்ச வைரவம், வந்தே காசி குகாமி கங்காம், பவானிம் மணி கர்ணிகாம்" என்று கங்காபுத்திரன் சொல்லும் காசியில், முக்கியமான தேவர்கள் என் குழந்தையுள்ளத்தி லுண்டாக்கிய குதூகலம் இன்னும் காசியைப் பற்றி நினைக்கும்போது, மனதில்

உவகை உண்டாக்குகிறது. கங்கைக் கரையில் காலையிலும் மாலையிலும், கங்காதேவிக்கு பூஜைகள் புரிவோர், எண்ணத்திலடங்காது. மஞ்சளும், குங்குமமும், பாலும், தைல வர்க்கங்களும், காசும் பணமும், கங்காதேவி கைப்பற்றிக் கொள்வாள். கற்றதனாலாயபயன்—இறைவன் நற்றாள் தொழுவதே, என்பதை அவ்வூர் வாசிகள் நன்குணர்ந்தவர்கள். இறைவனை நதியிலும், சிலையிலும், லிங்கத்திலும், சந்திலும், பொந்திலும் கண்டு தரிசிக்கும் பாக்யம் பெற்றவர்கள். மகா சிவராத்ரி என்றால் பூலோக கைலாசமாக விளங்கும் அவ்வூர். நமது ஊர்களில், தெய்வ பக்தி குறைந்தும், வீண் விவாதங்கள் வலுத்தும் வருவதால், பூஜைகள், விரதங்கள் யாவும் மறையத் தொடங்கி விட்டன. இப்போது மகாத்மா காந்தி அவர்கள் சமீபத்தில் மீனாக்ஷி அம்மன் தரிசனத்திற்காக மதுரை வந்திருந்த சமயம், பிரார்த்தனை சமயத்தில் பார்த்தவர்களுக்கு தெய்வ பக்தி மறுபடியும் ஏற்பட்டு விடுகிறது என்பதை நானே நேரில் பார்த்துவிட்டு எழுதுகிறேன்.

நிற்க, நமது ஊரில் ஏகாதசிக் கதை சொல்லுவார்கள் கேட்டிருக்கிறேன். அதாவது ஏகாதசி விரதம் என்று மற்றவர்கள் எண்ணிக்கொள்ள வேண்டும், வயிற்றை மட்டும் வாடவிடக் கூடாதென்று. அதற்காகப் புருஷனும், மனைவியும்கூட, புருஷனறியாமல் மனைவியும், மனைவியறியாமல் புருஷனும் சாப்பிடவும் தயங்கமாட்டார்கள், என்பது கதை. அங்கு இரண்டு வயதுக் குழந்தைகளும் கூட, மகா சிவராத்ரி அன்று உபவாசமிருப்பார்கள்.

நமது நாட்டவரைப்போல் விரத தினங்களில், பலகாரங்கள் என்று பேர் கொண்ட பலவித பக்ஷணங்களை, அதாவது நாம் தினம் சாப்பிடும் ஆகாரங்களைக் காட்டிலும், பல மடங்கு அதிகமான அளவும், செலவும் உள்ள சாமான்களைச் சாப்பிட மாட்டார்கள். நான் இப்படி எழுதியதற்கு, தென்னாட்டு நேயர்கள் வருத்தப்பட மாட்டார்களென்று நினைக்கிறேன். நம்மிடமுள்ள தவறை எடுத்துச் சொல்லும்போது, தவறை நீக்கவேண்டுமே தவிர, கோபமுறலாகாது.

11. 'பாஞ்சாலி சபதம்'

ஒரு புஸ்தகப் பார்சல் வந்தது தந்தையாரிட மிருந்து. "பாஞ்சாலி சபதம்" முதற்பாகம் மூன்று புத்தகங்கள் இருந்தன. எனக்கு, பெரியம்மாவுக்கு, அத்தைக்கு ஆக மூன்று. புஸ்தகங்களைப் பிரித் தோம். நன்ருகப் பொருள் விளங்கவில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்த்தேன். அப்போதெல் லாம் பாட்டுக்கள் தான் அதிகம் பாடுவார்கள் பெண்கள். கவிதையில் அவர்களுக்கு மோகம் கிடையாது. நான் புஸ்தக முழுவதும் திருப்பினேன். எல்லாப் பாட்டுக்களும் நொண்டிச்சிந்து "வர்ண மெட்டி"லேயே இருந்தன. எத்தனை நேரம் ஒரே ராகத்தில் பாடிக்கொண்டிருப்பது என்று சலிப்புத் தட்டியது. தொலையாத தூரத்திற்கு கட்டை வண்டி யில் செல்வது போன்ற உணர்ச்சி தோன்றியது என் மனதில். அதனுல் தந்தையார் அந்தப் பாடல் களுக்குப் பின்னுல் எழுதியுள்ள, கருத்துக்களை கவனிக்கலானேன்.

பாஞ்சாலி சபதம், என் அகக் கண்களுக்குத் தருமரின் ராஜசூய யாகத்தின் சிறப்பையும், பொருமை மனங் கொண்ட துரியோதனனையும், சதிகாரனுன சகுனியின் தந்திரங்களையும் காட் டிற்று. மேலே கூறிய விஷயங்களினுல், என் மனம் குழம்பித் தத்தளித்தது. ஆனுல் திருதராஷ்டிரனின்

வேண்டுகோளுக் கிணங்கிப் பாண்டவர்கள் அஸ்திஞபுரம் செல்லும் வழியில் அர்ஜுனனும், துரோபதையும் ஒரு தோட்டத்தி லமர்ந்து களைப்பாறும் கட்டத்தில் என் மனம் மிகவும் லயித்துவிட்டது. அவ்விருவரும் ஒன்ருக அனுபவித்த மாலைக் காட்சி, வான ஸௌந்தரியம் என் மனத்தை விட்டகல வில்லை.

ஓர் நாள் நித்திரையில் கனவு. நான் பிதற்றியிருக்கிறேன். "நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை தீப்பட்டெரிவன! எரிந்து விடும் தங்கத் தீவுகள்! எத்தனை செம்மை! எத்தனை கருமை! தங்கத் திமிங்கிலம்! இருட்கடல்! ஒளித்திரள்! கருஞ் சிகரம்!" என்றெல்லாம். பெரியம்மா விரைவாகத் தட்டி என்னை எழுப்பினுள். "என்னடி உளறுகிருய்? என்ன தீவு? ஏது பூதம்? எங்காவது பயந்து கொண்டாயா?" என்று கேட்டுவிட்டு, விபூதி எடுத்து நெற்றியிலிட்டாள். எனக்குச் சிரிப்பும் பயமும் சேர்ந்து வந்தன. பெரியம்மாவின் பயத்தைக் கண்டு சிரிப்பு. அவள் கோபிப்பாளென்று பயம். பின்பு மெதுவாகச் சொன்னேன். "பூதம் ஒன்றுமில்லையம்மா. பாஞ்சாலி சபதத்தில் வானத்தின் வர்ணனை வருகிறது பார். அது என் மனத்திற்குப் பிடித்திருந்தது. அதனுல் கனவிலும் அதையே புலம்பி யிருக்கிறேன்" என்றேன்.

காசியில், வீட்டில் அநேக நாடகங்களும், கதைகளும், நாவல்களும் இருந்தன. எல்லாப் புஸ்தகங்களையும் வாசித்திருக்கிறேன். அதில் வரும் கதா

நாயகன், நாயகி சம்பாஷணைகளும், செய்கைகளும் என் மனத்தில் அருவருப்பையும், பயத்தையும் தான் கொடுக்கும். ஆனால், "பாஞ்சாலி சபதம்" என் குழந்தை மனத்திற்கு எவ்விதம் தோன்றிய தென்பதை ஒரு காட்சியாகச் சித்தரித்துக் கூறுகிறேன்.

மாலை அஸ்தினாபுரத்தை யடுத்த சோலை. காதலருக்குள் ஏதோ சம்பாஷணை நடக்கிறதே! அர்ஜுனன் திரௌபதியிடம் கண்ணே, முத்தே, மானே, மயிலே என்று பிதற்றவில்லை. அவளுடன் சேர்ந்து பிரகிருதி தேவியின் அற்புத ஸௌந்தரியத்தை அனுபவித்து மகிழ்கிறான். அவனது கண்களுக்கு சூரியனும், மேகங்களும், எவ்வண்ணம் காட்சியளிக்கின்றன.

அர்ஜுனன்:—அன்பே, இதுவரை வழியில் வந்த களைப்புகள் யாவையும், இந்த மாலை வேளையும், மந்த மாருதமும் போக்கிவிட்டன. இந்த உலகத் தேவியின் வனப்பை என்னால் அளவிட முடியாது. கண்கொள்ளாக் காட்சி. மேலே பார் வானத்தை.

பாஞ்சாலி:—ஸ்வாமி, வானத்தில் மேகங்கள் தானே வர்ணங்களைப் போர்த்து உலாவுகின்றன. தங்களுக்கு அவைகள்பால் ஏன் இத்தனை மோகம்.

அர்ஜுனன்:—கண்ணே, போர்வையா அது. பராசக்தியின், ஜகன்மாதாவின் சித்திர விளையாட்டு. அழகின் குவியல், அந்தத்தின் அரும் பொருள்கள்!

பாஞ்சாலி:—நாதா, தங்கள் கலைக் கண்களுக்கு வானில் தோன்றும் மேகங்களும் புது மாதிரியாகத்

தோன்றுகின்றன போலும்! எங்கே, அவைகளை உங்களுக்குத் தோன்றும் காட்சிகளை ஒன்று சேர்த்துக் கூறுங்கள்.

அர்ஜுனன் :—பெண்ணே, நீ கேட்பது சரி. இந்த வர்ணக் காட்சிகளைச் செய்ய, நாம் எத்தனை ஐசுவரியம் செலவழித்தாலும், இதுபோல் அமைக்க முடியுமா? இலவசமாகப் பார்த்து மகிழும்படி நமக்கு இயற்கையன்னை அருளிய காட்சிச் செல்வங்கள் இவைகள். அவள் ஒரு பெரிய கலைக்கடல் அழகுத் தெய்வம்.

பாஞ்சாலி :—நாதா! தாங்கள் காணும் காட்சிகளை எனக்கும் விவரமாகக் கூறவேண்டும்.

அர்ஜுனன் :—நன்று. பாடுகிறேன்.

பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடி யிந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி
விட்ட வோடைகள்! வெம்மைதோன் றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! பாரடி!
நீலப் பொய்கைகள் அடடா நீல
வன்ன மொன்றி லெத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்
நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள்! காணடி யங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! ஆஹா! எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!

12. யமுனைக் கரையிலே

காசிக்கு வரும் யாத்ரிகர்கள் பெரும்பாலும் மன அமைதி காண்பதற்கென்றே வருவார்கள். கொடுந் துன்பப் புயலினால் தாக்குண்டவர்கள், பரம தரித்ரர்கள், பெரும் பணக்காரர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள் எல்லாரும் வருவதுண்டு. அங்கு அவரவர் மனத்திற்கேற்ப விஷயங்கள், அவர்களுக்கு அகப்படும். பொதுவாக எல்லாருக்குமே ஒரு உற்சாகமாக ஆகிவிடுகிறது. யாத்திரை நம்நாட்டுக் கோவில்களைப்போல் சுவாமியை எட்டி நின்று தரிசிப்பது வடநாட்டில் வழக்கமில்லை. சாதி ஹிந்துக்கள் யாரும் கடவுளரைக் கையினால் அபிஷேகம் அர்ச்சனை செய்து பூஜித்து மகிழ ஒரு தடையும் அங்கு இராது. அதேபோல மனிதரையே தெய்வங்களாக வரித்துப் பூஜிப்பதும் அங்கு வழக்கம். அங்குள்ள மடங்களிலுள்ள தம்பதிகளையே விசுவநாத விசாலாக்ஷியாக வரித்து தம்பதி பூஜை செய்வார்கள்.

இதனால் ஏழையா யிருப்பவர்களுக்குச் சாப்பாட்டுக் கவலையும், துணிக் கவலையும் இல்லாமல் ஆகிவிடும். கங்கையில் ஸ்நானம் செய்த பின், ஒரு வாரம் யாத்திரைகளை முடித்துக் கொண்டு பிரயாகை செல்வார்கள். அங்குதான் யாத்ரிகர்களுக்கு விநோதமான நிகழ்ச்சிகள் காத்திருக்கும். கங்கையும் யமுனை

யும் கலந்து ஓடும் அலஹாபாத் நதிக்கரைக்குச் சற்று மனக்குதிரையைத் தட்டுவோம். யமுனா நதி தான் என்ன கருமை! என்ன அழகிய நீலம்! அதன் ஆழமோ நம்மைத் திகிலுறச்செய்யும். யமனுடைய தங்கையாகிய யமுனாதேவியும் பரமசிவனின் சடையில் தோன்றிய பால் நிறத்தளாகிய கங்கையும் சங்கமமாகும் அந்த இடத்தில், அந்தர் வாகினியாக சரஸ்வதி நதியும் கலக்கிறாள் என்பது புராண வரலாறு. கங்கை நடுவில், அதாவது சங்கம ஸ்தானத்திற்கு படகில் செல்லவேண்டும். கரையில் அழகழகான காட்சிகள்! தம்பதிகள்! கணவரது மடியில் வீற்றிருக்கும் மனைவியர் வெட்கத்தினால் வெளுத்த முகம், நாணத்தினால் கோணும் உடம்பு, குளிரினால் நடுங்கும் உதடு, புண்ணியம் கிடைக்கப்போகிறது என்ற நம்பிக்கையினால் மகிழும் மனம் இவற்றை யுடையோராய் வீற்றிருப்பார்கள்.

புருஷனே (சினிமா அநுபவம் சற்றுமில்லாத கிராமவாசிகள் பலர்) மனைவியின் கூந்தலை வாரிப் பின்னுவதற்கு மிகவும் சிரமப்படுவார்கள். அநேகருக்கு கூந்தலைப் பின்னத் தெரியாது. ஓலை முடைவதைப்போல் ஒரு விதமாகப் பின்னுவார்கள். உடனே, கங்காபுத்ரன் அதாவது (கயாவாளி அல்லது காட்வாலா) அதை நுனியில் கத்தரிக்கும்படி ஆக்ஞையிடுவான். அதையும் செய்வார்கள். பின்பு அந்த முடியை சங்கமத்தில் போட படகில் ஏறுவார்கள். முதலையும், ஆமையும் நமது படகருகே வந்து கொண்டிருக்கும். யமுனா நதியில் ஆமைகள் அதிகமுண்டு. சில பெண்கள் அவற்றைக் கண்டு பயத்தி

னால் நடுநடுங்குவார்கள். கூந்தலையும், பணம்காசையும், பழம், பாக்கு வெற்றிலை எல்லாவற்றையும் தண்ணீரில் போட்டு விட்டுக் கரை வந்து சேர்வார்கள் யாத்ரிகர்கள். இந்த நிகழ்ச்சிக்குத் "திருவேணி தானம்" என்று பெயர். இப்படி வடநாடுகளிலுள்ள ஒவ்வொரு ஸ்தலத்தையும் எழுதிக்கொண்டு போனால் ஸ்தல புராணமாக மாறிவிடும்.

13. ஊர்கள் கொடுத்த உவகை

காசியிலிருந்து கல்கத்தா வழியாக ஊர் திரும்பினேன். கல்கத்தாவில், மியூசியம் மிகப் பெரிது. உலகத்திலுள்ள மிருகங்களின் வீடு என்று சொல்லலாம் என்று தோன்றியது எனக்கு. காளி கோயிலுக்குச் சென்றேன். என்ன பயங்கரமான காட்சி! உலகமாதா உக்கிர வடிவம் கொண்டாளென நினைக்கும்படி காளிதேவியின் உருவம் அமைந்திருந்தது. நாக்கும், பல்லும் தேவியின் கோபத்தைக் காண்பித்தன. எதிரே எத்தனை ஆடுகள் பலி! அப்பப்பா, கோரமான காட்சி! ரத்த ஆறு ஓடியது! ரத்தத்தை பார்த்தறியாத நான் கதிகலங்கி விட்டேன். என் மனம் தீவிரமாய் சிந்தனை செய்யத் தொடங்கியது. துஷ்டர்களை அடக்குவதற்கு துர்க்கை அவதாரம் செய்தாள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், ஒரு பாவமும் அறியாத ஆடுகள் அல்லவா காளியின் முன் கழுத்தறுப்புண்டு இரத்தவெள்ளத்தில் மிதக்கின்றன! என்றெல்லாம் யோசனை ஓடியது.

பின்பு, ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் கோவில் சற்று சாந்தியளித்தது. மற்றும் அங்குள்ள அழகிய கட்டடங்களையும் பார்த்துவிட்டு ரயில் ஏறினோம். ரயிலில் கூட்டம் அதிகமாயிருந்தது. இரவு ரயில் போய்க்கொண்டேயிருக்கும். என்னை எனது அத்தை

கணவர் தான் அழைத்து வந்தார். அவர் சில சமயம் தூங்கிவிடுவார். அருகிலுள்ள வங்காளப் பெண் ணொருத்தி என்னுடன் பேசிக்கொண்டு வந்தாள். "இந்தக் காடுகளில் பதினரடி வேங்கைகள் வாசம் செய்யும். அதனால்த்தான் ரயிலை வேகமாக விடுகி ருன்" என்றெல்லாம் கப்ஸாக்கள் விடுவாள். ஆனால் அவள் சொல்லும்போது உண்மையென்று தான் நம்பியிருந்தேன். பேச்சு ரொம்ப சுவாரசியமா யிருக்கும்.

புறப்பட்ட ஐந்தாம் நாளோ என்னவோ சென்னை வந்திறங்கினேம். காசி வாசிகளுக்கும், சென்னை வாசிகளுக்கும் உருவத்தில் எத்தனை வித்தி யாசம்! ஆஜானுபாகுவாய் பொன்னகர்த் தேவர் களைப் போல் விளங்கும் ஹிந்துஸ்தானிகளுக்கும், உருவத்தில் ஒடுங்கிக் கருத்து மெலிந்து வாடிநிற்கும் நம்மவருக்கும்—மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தி யாசம் விளங்கியது. சென்னையிலும், மியூசியம் பார்த்தேன். இரண்டு மூன்று நரிகளையும், குரங்கு களையும் அங்கு பார்த்தபொழுது எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

எங்கள் ஊராகிய எட்டையபுரம் போய்ச் சேர்ந்தோம். ஏழெட்டு நாட்கள் அங்கு இருந்தேன். அங்கு எனது விஜயத்தினல் சில சண்டைகளும் ஏற்பட்டன. அதாவது தந்தையாரின் மாமன் வீட்டாருக்கும், நான் இறங்கி யிருந்த அத்தை கணவரின் உறவினருக்கும். சண்டை எல்லாம் அன்பின் மிகுதியினல் ஏற்பட்டவையே. என்னைத்

தந்தையாரின் பிரதிபிம்பமாகவே அவர்கள் நினைத்திருந்ததால் - தங்களோடு தங்கள் வீட்டில் நான் இருக்கவேண்டும் என்று விரும்பியதாலும்தான். பாண்டவர்கள் கௌரவர்கள் என்ற சிறப்புப் பெயரைப்போல் "தீக்ஷிதர் வீட்டார்" என்று ஒரு குடும்பத்தாரும், "கிராம முன்ஸீப் வீட்டார்" என்று ஒரு குடும்பத்தாரும் எங்கள் பந்துக்கள் ஆவார்கள். நல்ல வேளையாக என் முகாந்தரமாக இவர்கள் இரண்டு குடும்பத்தாருக்கும் கைகலப்பு ஏற்படுமுன்பே கடையத்திலிருந்து தாத்தா வந்து என்னை அழைத்துச் சென்றுவிட்டார்.

எட்டையபுரத்தில் நான் தங்கியிருந்த ஏழெட்டு நாளுக்குள்ளாக ஒருநாள் சிவராத்திரிப் பண்டிகையும் வந்தது. எனக்கு அன்று மிகவும் உற்சாகமாகக் கழிந்தது. குழந்தைகள் அன்றெல்லாம்விதவிதமான உடைகளையணிந்து, அலங்காரத்தோடு வீடுவீடாகச் சென்று எண்ணெய் சேகரித்து இரவு கண் விழிப்பார்கள்.

எண்ணெய் வார்த்தா லெண்ணெய்
இல்லாட்டாப் பொம்மை
ஆச்சு, வார்த்தா லாச்சு
இல்லாட்டாப் போச்சு!
ஆலத்தூரு போவோம் நாங்கள்
ஆடிப்பாடி வருவோம் நாங்கள்

என்றெல்லாம் அர்த்தமில்லாமல் வாய்க்கு வந்த விதம் பாடிக்கொண்டு எண்ணெய் சேகரித்தோம். எங்களுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்கள் எல்லாம் அரண்மனையிலிருந்து வாங்கி வந்து

அலங்கரித்தார் என் பாட்டியார் சின்னம்மாள். இந்தமாதிரி இரவல்கள் கொடுப்பதற்கென ஏராள மாக நகைகள் வைத்திருப்பார்கள் அரண்மனையார். எங்கள் ஊர் அரண்மனை நகைகள் ஏழை பணக் காரர் என்ற வித்யாசமில்லாமல் எல்லோரையும் அலங்கரிக்கும். "அரண்மனை காத்தவனும், அடுக் களை காத்தவனும்" பலன்பெறாது போவதுண்டா? எல்லாவிதமான சௌகரியங்களும் குடிஜனங் களுக்கு அரண்மனையிலிருந்து கிடைத்துவிடும். அதிலும் எனக்கு—சின்னச்சாமி அய்யரின் பேத்தி யாகிய எனக்கு—எந்த சாமானும் இலகுவில் அகப் பட்டுவிடும். (தற்புகழ்ச்சி அதிகமாகி விட்டதே வாசகர் நினைக்கலாகாது; உண்மையையே எழுது கிறேன்) இந்தவிதமாக அலங்கரிக்கப்பட்ட எங் களுக்கு இரவில் நாடகம் நடிப்பதற்கு ஆசை ஏற் பட்டது. உடனே நாங்கள் நாலைந்து பெயர்கள் சேர்ந்து ஒரு கதையை நடிக்கவும் செய்தோம். மாதக் கணக்காகப் பயின்று ஒத்திகை முதலானதும் பார்த்து நடிக்கும் நாடகத்தைவிட திடீரென்று நடித்த எங்கள் நடிப்பே மிகத் திறமாயிருக்கிற தென்று பார்த்தவர்கள் எல்லாரும் மெச்சினார்கள். பிள்ளைப் பிராயத்தின் உற்சாகமல்லவா?

14. கோலாட்டம்

எங்கள் ஊர் சாமான்யமானதென்று நினைக்கக் கூடாது. எத்தனையோ வேடிக்கைகள், எத்தனையோ விசித்திரங்கள் எல்லாவற்றையும் பார்த்தது எங்கள் ஊர். காசியிலிருந்து திரும்பி வந்து ஊரைப் பார்த் ததும் எனக்கு ஆனந்தத்தால் உடம்பு சிலிர்த்தது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தேரடிக்கு வண்டி வந்ததும், மனம் சந்தோஷத்தினுலும், பலவித உணர்ச்சிகளாலும் கட்டுக் கடங்காத தாயிற்று. ஊருக்கு நாலைந்து ஸ்டேஷன்களிருக்கும்போதே பதற்றங் கொண்ட மனம் கிராமத்தருகே செல்லச் செல்லத் துடியாய்த் துடிக்க ஆரம்பித்தது. வண்டி மாடுகள் என்னவோ வேகமாய்த்தான் போய்க் கொண்டிருந்தன. ஆனுல் அவை மெதுவாக ஊர்ந்து செல்கின்றனவோ என்ற சந்தேகமுண்டாயிற்று. கடைத்தெரு எனக்குக் கண்கொள்ளாக் காட்சியா யிருந்தது. வெகுநாளாகக் கூட்டிலடைபட்ட பறவை விடுதலை அடைந்தாற்போல என் மனமும் அதன் இஷ்டப்படி திரிந்தது. தாத்தாதான் என்னை அழைத்து வந்தார். முப்பிடாரி கோயிலும், சிவன் கோயிலும் தாண்டியதும் வண்டியைச் சுற்றிக் கூட்டம்கூட ஆரம்பித்துவிட்டது.

நிலவு பால்போல் பிரகாசித்தது. அந்தக் கூட் டத்தில் காணப்பட்ட சிறுவரில் பெரும்பாலோர்

புதிய முகங்களாகவே காணப்பட்டனர். ஒருவாறு வீட்டை அடைந்து சாப்பாடு, பந்துக்களின் "குசல ப்ரசனம்" முடிந்ததும் நித்திரை இல்லாமலேயே இரவு கழிந்தது. எண்ணங்கள் அலையாக வந்து மோதின. அக்காலத்தில் கல்யாணம்தான் மிக முக்கியமான இலட்சியமாக மதிக்கப்பட்டு வந்த காலம். "குழந்தை வளர்ந்துவிட்டாளே, கல்யாணம் செய்யவேண்டாமா?" என்ற கேள்விகள் தாத்தா விடம் கேட்கப்பட்டன. கன்னி வாழ்க்கையே கூடாது என்பது அவர்கள் விருப்பம் போலும்! ஆற்றங்கரையோரத்தில் புன்னைத்தோப்பு உண்டு. புன்னையிலையில்தான் கிராமத்தில் அநேகர் சாப்பிடு வார்கள். தினமும் பெண்கள்யாவரும் தோப்புக்குச் சென்று மரத்தின் மேலேறி இலை பறிப்பதும், ஆனந்தமாக ஸ்நானம் செய்துவிட்டு, வீட்டுக்குவந்து, அந்த இலைகளைத் தைப்பதுமாகப் பொழுதுபோகும்.

தாழம்பூ மிக அதிகமாகவும், மணமாகவும், மலி வாகவும் எங்களூரில் அகப்படும். விதவிதமான பின் னல்கள் பின்னுவதும், பலநிறக் கம்பளி நூலினுல், குல்லாய்கள், மேஜோடுகள், சவுக்கங்கள் போடு வதும் பெண்களின் வேலைகள். அருகிலுள்ள நகரங் களில் சென்று நூல் வாங்கி வந்து எப்போதும் இடுப்பில் நூல்கண்டும், மடியில் சவுக்கமுமாகக் காட்சியளிப்பார்கள். கழுத்துப்பட்டியும் அப்போது புதிய பாஷன். மாப்பிள்ளைகளுக்காக கழுத்துப் பட்டியும், பாசிப் பிரம்பு, பாசிப் பேனுக்களும் தயாரிப்பதில் ஒவ்வொரு பெண்களும் ஜரூராயிருப் பார்கள். தமக்கேற்ற நாயகரை சிறுபெண்கள்

ஏற்கனவே வரித்திருப்பார்கள். அதாவது அத்தான் அம்மாஞ்சி, முதலிய முறைப் பிள்ளைகளை. அவரவர் அழகு நிறங்களுக்கேற்ற வண்ணம் கழுத்துப்பட்டி தயாராகும். பின்னல்களில், சங்கிலி, பின்னல் என்று எத்தனையோ ரகம் உண்டு. பொதுவாக நகர வாசத்துப் பெண்களைவிட, கிராமத்துப் பெண்களுக்கு உல்லாசமாகப் பொழுது போக்க அநேக வசதிகள் இருக்கின்றன; கிணற்றுத் தண்ணீர் எடுக்க, குளிப்பதற்காக ஆறு-குளம் செல்ல, சுவாமி தரிசனத்திற்காகக் கோவில்களுக்குப் போக, பண்டிகைகள் வேறு வந்து உற்சாகமூட்ட, மகிழ்ச்சியிலேயே திளைப்பார்கள்.

தீபாவளியானால் மறு நாள் கோலாட்டம் ஆரம்பம். எங்களூரில் ஏழெட்டு ரூபாய்களே சேரும். அதையே நாங்கள் பெருந்தொகை என்று மதித்திருப்போம். சங்கீத ஞானம் அதிகமுள்ள பெண்கள் எனது தோழிகள். கோலாட்ட சங்கீதவெள்ளத்தில் ஊரே இரண்டு மூன்று மாதங்கள் மிதந்துகொண்டிருக்கும் என்றாலும் மிகையாகாது. எங்கள் தாத்தாதான் கோலாட்டத்தை நடத்திவைப்பார். பாட்டுச் சொல்லிக்கொடுப்பது, தெரியாத குழந்தைகளுக்குப் பதிலாக நின்று கோலாட்டம் போடுவது, கோலாட்டத்தை விமரிசையாக முடிப்பது எல்லாம் அவர் பொறுப்புத்தான். வழக்கமாகப் பாடும் பாட்டுக்கள் தவிர, நந்தன் சரித்திரப் பாட்டுக்கள், ராமாயணப் பதங்கள், தீக்ஷிதர் கீர்த்தனைகள்யாவும் சிரமப்பட்டுச் சொல்லிக் கொடுப்பார். யாரேனும் தாளம் தவறினால் கோலாட்டக்கழியினால் அவர்கள் தலையில் போடவும் தவற மாட்டார்.

5

அவருக்கு முன்கோபம் அசாத்யம். "நந்தன் சரித்திரம் ஆனந்தம்" "கனக சபாபதி" "தாண்டவ தரிசனம்" "குஞ்சிதபாதத்தை" "ஆருக்குத் தான் தெரியும்" முதலிய பாடல்களைப் பாடும் பொழுது தன்னை மறந்து 'இதுதான் தில்லை ஸ்தலம்' என்று நினைத்து விடுவோம் எங்கள் ஊரை. "நல்லோர் பெரியோர் என்னை வசையும் சொல்லலாச்சே" என்ற ராமநாடகப் பாட்டில் ஈடுபட்டு குழந்தைகள் கண்ணீர் விடுவதைக் கண்டு தாத்தா அதை நீக்கிவிட்டார். சிலசமயம் அதாவது தாத்தா முன்னின்று கோலாட்டத்தை முடிக்காத வருஷங்களில் கோலாட்ட முடிவுச் சண்டையும் ஏற்படுவதுண்டு. கோலாட்டத்தில் புஷ்பம் போதாது. எங்கள் வீட்டுக் குழந்தைக்கு சிறிய ஆரம் கொடுத்தார்கள்; நான் கால் ரூபாய் போட்டேன், அப்படியிருந்தும் இப்படி அவமரியாதை செய்து விட்டார்கள் என்று ஒரு பிரமுகர் நதியில் ஸ்நானம் செய்யும் போது சொல்லுவார், தமது சகதர்மிணியின் தூண்டுதலின் பேரில். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர் அவசரமாகத் துணிகூடத் தோய்க்காமல் கிளம்பிக் கோலாட்டம் முடித்தவரிடம் சென்று கலகம் மூட்டுவார். அதைக் கேட்ட அவர் மனைவி "ஆமாம் அவன் மாதிரி எங்களையும் எண்ணினுன் போலும், பொதுப் பணத்தை அபகரிக்கும்படி எங்களுக்கென்ன சாப்பாட்டுக்கு இல்லையா அவனைப்போல். அவனுக்குத் தர்ம சொத்தைச் சாப்பிட்ட வழக்கம் இப்படிச் சொல்லத் தோன்றுகிறது" என்பாள். இதுபோன்ற சம்பாஷணைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு பழிச்சண்டையில் முடியும்.

பின்பு ஐந்தாறு வருஷங்களுக்கு அந்தக் குடும்பங்களில் சமாதானம் நிலவாது. தாத்தாவுக்கு எங்கள் கிராமத்திலும், எங்கள் ஜில்லாவிலுமே செல்வாக்கு அதிகம். அதனால் அவர் முன் நிற்கும் எந்தக் காரியத்திற்கும் எதிர்ப்பே யிராது. பரதநாட்டியத்தில் ஒரு பெண் ஆடுவதன்மூலமும், தன் ஒவ்வொரு அங்க அசைவின் மூலமாகவும் தன் மனோபாவங்களை வெளியிட முடியும். கோலாட்டத்திலே பத்துப் பதினைந்து பேர் சேர்ந்து ஒரு பாட்டுக்கிசைய ஆடிப் பாடிப் பார்ப்போரைக் களிக்கச்செய்ய வேண்டும். ஒரு சிறுமி தவறு செய்தாலும் கோலாட்டம் ரஸங் கெட்டு விடும். ஆட்டத்தில் அத்தனைபேரும் ரஸிகர்களா யிருந்தால் மட்டுமே பார்ப்பவரை ரஸிக்கச் செய்ய முடியும். அந்த வருஷம் கோலாட்டம் தாத்தாவின் தலைமையில் விமரிசையாக முடிந்தது.

15. 'கண்டறியாதன கண்டேன்'

இடையத்திலிருந்து புதுவைக்குப் புறப்பட்டோம். என் தாயார் என்னை அழைத்துச் செல்வதற்குப் புதுவையினின்றும் வந்தார். என் தங்கை பாப்பாவும் தாயாருடன் வந்திருந்தாள். ஒரு வயதில் பார்த்த பாப்பா இப்போது 'சின்னஞ்சிறு குருவி போல திரிந்து பறந்து வரும்' பாப்பாவாயிருந்தாள். பாப்பா புதுவை சமாசாரங்கள் அப்பாவைப்பற்றிய விவரங்கள் எல்லாம் எனக்குக் கூறினாள். அவள் நாம் ஒரு ராணியென்ற மனப்பான்மைகொண்டிருந்தாள். அவள் மனதில் தேசமும், யுத்தமும் தான் எப்போதும் தோன்றிக்கொண்டிருக்கும். அவளுக்கு ஜுரமாயிருந்த சமயம் அப்பா சொல்லிய ரஜபுத்ர கதைகள் அப்படி அவள் மனதில் வேரூன்றியிருந்தன. தூக்கத்திலும் விழிப்பிலும், சேனைகள், சேனாதிபதிகள், வெற்றி, தோல்வி, இவற்றிலேதான் அவள் மனம் சென்று கொண்டிருக்கும். புதுவையிலுள்ள அவளது விளையாட்டுத் தோழிகள் எல்லோரையும் பற்றி அறிந்துகொண்டேன்.

புதுவைக்குப் புறப்பட்டோம். எங்களோடு மாமாவும் வந்தார். தூத்துக்குடி, திருச்சி இரண்டு ஊர்களிலும் இறங்கினோம். திருச்சியில் டாக்டர் ராஜன் அவர்களை சந்திக்கும் பாக்யம் எங்களுக்கு கிட்டியது. அவர் வீட்டுக் கல்யாணத்திற்குப்

போனோம். திருச்சினுப்பள்ளி மலைக்கோட்டைப் பிள்ளையாரையும் தாயுமானவரையும் தரிசித்தோம். அங்கு கடைவீதியிலிருந்த 'கதம்ப மலர்' காதவழி வரை மணம் வீசிற்று. பறவைகளைப் போல் சுறு சுறுப்பாய் மலையேறினோம். நாலைந்து நாட்கள் அங்கு இருந்தோம். புதுவைக்கு ரயிலேறினோம். எங்களுக்குத் துணையாக ஒரு நண்பரையும் எங்க ளுடன் அனுப்பினர் மாமா. ஆனால் நாங்கள் தான் அவரை ரயிலில் பத்திரமாய் பார்த்துக் கொள்ள வேண்டி யிருந்தது. ரயிலில் எனக்குத் தாகம் அதிகமாயிருந்தது. தண்ணீர் வேண்டும் என்றேன் அந்த நண்பரிடம். உடனே ஒரு சிறு ஸ்டேஷன் வந்தது. மடமடவென்று கீழேயிறங்கினர் நண்பர் கையில் கூஜாவோடு; ரயிலும் புறப்பட்டது. நண் பரைக் காணோமே என்ற திகிலுடன் ஜன்னல் வழியே வெளியில் பார்த்தேன். பிராமணர் கூஜா வோடு ஓடிவந்தார். கையைப்பிடித்து அவரை உள்ளே யிழுத்தோம் ஒருவிதமாக. ஆவலுடன் தண்ணீர் குடிக்கப் போனேன். என்ன ஏமாற்றம்! டம்ளரில் விடும்போது நாற்றம் குடலை யறுத்தது. அத்தனையும் மண்ணெண்ணை. ஜலம் கிடைக்காமல் போனதுகூட எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. கூஜாவில் வேறு தண்ணீரோ காப்பியோ வாங்க வழியில்லாமல் ஆகிவிட்டது. ரயிலில் பிச்சைக் காரன் ஒருவன் "அள்ளி அள்ளிக் குடிக்கும் நல்ல நீரோடையாம்" என்ற பாட்டைப் பாடினன். எனக்கும் அது வேடிக்கையாகத்தானிருந்தது.

புதுவை போய்ச் சேர்ந்தோம். பகல் மணி இரண்டிருக்கும். சந்தோஷமும், கிளர்ச்சியும் மன

தில் அலைமோதின. உணர்ச்சி வேகத்தால் நெஞ்சம் படபடவென அடித்துக்கொண்டிருந்தது. தந்தையாரைப் பார்க்க எத்தனை நாட்கள் எண்ணி எண்ணி ஏங்கியிருக்கிறேன்! புதுவை நகரில் எதைப் பார்த்தாலும் புதுமை தோன்றியது எனக்கு. வண்டி வந்து நின்றது. புஷ் வண்டி. அதாவது தள்ளுவண்டி. இரண்டு பேர்தான் உட்காரமுடியும். அதில் ஏறி வீடு வந்து சேர்ந்தோம். கடற் காற்று சில்லென்று முகத்தில் வந்து வீசியது. வீதிகளில் கோலங்களும், அலங்காரங்களும் கண்ணைக் கவர்ந்தன. மாட மாளிகை, கூடகோபுரம் என்றெல்லாம் வர்ணிப்பார்களே, அந்த வர்ணனை யெல்லாம் புதுவைநகர்த் தெருக்களுக்கு இசையும் என்று தோன்றியது எனக்கு. கதவைத் தட்டினோம்; கதவும் திறந்தது. என்னவென்று சொல்வேன், தந்தையார் என்னை வரவேற்ற வகையை! இதை யெழுதும் இன்றும் என் மனம் அந்தக் காட்சியை நினைத்து புளகாங்கித முறுகிறது; நாத் தழுதழுக்கின்றது; கண்களை நீர் மறைக்கின்றது; கையும் ஏதோ கிறுக்குகிறது.

நீண்டு வளர்ந்த தாடியும், சாந்த முகமும், அன்பும், ஆர்வமும் மிகுந்த கண்களும் பெற்ற ஒரு தவசியைப் போலிருந்தார் தந்தை. ஆவலுடன் தாயாரைப் பார்த்து, "இதுதானா தங்கம்மா!" என்றார். "ஆம்" என்றார் தாயார். அப்படியே தழுவிக் கொண்டார். உச்சி முகந்தார். ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்: ஆனால் நானோ வெட்கத்தினால் ஒன்றுமே பேச முடியவில்லை. பின்பு சாப்பாடு முடிந்ததும் எனது கல்வி, சங்கீதம் முதலியவை

களைச் சோதித்துப் பார்த்தார். மறு நாள்முதல் கூட்டங் கூட்டமாய் அன்பர்கள் வந்துகொண்டிருந் தனர் என்னைப் பார்ப்பதற்கும், தந்தையாருடன் சம்பாஷிப்பதற்கும். விலையுயர்ந்த பட்டுச் சித்தாடை, இரண்டு நண்பர்கள் மூலம் தருவித்து வைத்திருந்தார் தந்தை எனக்காக. நான் சொல்லிய புதிய ஹிந்துஸ்தானிப் பாட்டுக்களை அவரும் கற்றுக் கொண்டார் என்னிடம்.

வீட்டில் எப்போதும் பாட்டும், கூத்தும், களியுந்தான். அப்போது நானடைந்த இன்பம் அமரரும் அடைந்திரார் என்று எனக்குத் தோன்று கிறது. புதிய புதிய பாட்டுக்கள்; அவைகளுக்குப் புதிய புதிய மெட்டுக்கள்! களிதுள்ளும் மனிதர்; எத்தனை இன்பமயமாகக் கழிந்தன அந்த நாட்கள்! தந்தையார் கடலையும், வானையும், சோலையையும் எப்போதும் உற்ற துணைவராகக் கருதும் இயல் புடையவர். வான ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, நாகரிக ஆராய்ச்சி, சங்கீத ஆராய்ச்சி, அதோடு விஞ்ஞான ஆராய்ச்சியையும் நாங்கள் நடத்து வோம். ஒரு ஆராய்ச்சிக் கூடமாகவே எங்கள் அகம் திகழ்ந்ததெனலாம்.

16. மங்கை உதயம்

அத்தியாயத்தின் தலைப்பு, நேயரை புதுமைப் பெண்ணையோ, அல்லது கர்நாடகப் பெண்ணைப் பற்றியோ, அளது பிறப்பைப் பற்றிய வர்ணனை களோ என்று ஏமாற்றமுறச் செய்யலாம். இது எந்தப் பெண்ணின் வரலாறுமல்ல!

மங்கைப் பருவம் என்னைக் கைக்கொண்ட நிகழ்ச்சியைத் தான் குறிப்பிடும். பிள்ளைப் பிராயம் என்னை விட்டகன்றது, சந்திரன் வரவு கண்ட மாலைப் பொழுதைப் போல். காலம் என்ற தோழி என்னை மறுபடி கடையத்திற்கே அழைத்துச் சென்றாள். தந்தையாரும் "சிறை வாசம்" என்ற பிணிப்பில் அகப்பட்டுப் பின்பு விடுதலைபெற்று அதே கடையத் திற்கு வந்து சேர்ந்தார். பாபநாசத்திலும், கடையத் திலும் வசிக்க வேண்டுமென அவர் தீர்மானித்திருந் தார். அந்தச் சமயத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளில் எனது கல்யாணமும் ஒன்று.

கடையம் வந்தவுடன்தான் எங்களுக்குப் பெருஞ் சோதனைகள் ஆரம்பித்தன. எதிர்பாராதபடி எல்லாக் காரியங்களும் நடைபெற்றன. தந்தை யாருக்கு முன்கோபம் அசாத்தியம். அது வராம லிருக்கச் செய்ய அவர் அரும்பாடு பட்டார். ஆனால் பிறவிக் குணத்தை மாற்ற முடியவில்லை. ஆயினும், வெகு சிரமப்பட்டுக் கோபத்தை நீக்கி

விடுவார். அவரைப் போலத் தன்னைத் திருத்திக் கொள்ள ஒருவராலும் முடியாது. அதை விளக்கவே இந்த அத்தியாயத்தை எழுதுகிறேன்.

வீட்டில் எனது கல்யாண பிரச்னை எல்லாவற்றிலும் முக்கிய ஸ்தானத்தை வகித்தது. அந்த நாளில் கல்யாணம் செய்வது ரொம்பவும் சிரமமாயிருந்தது. வரதக்ஷிணை ஏறி நின்ற காலம். என் மாமன் வீட்டார் அது விஷயமாக நிரம்பக் கவலைப்பட ஆரம்பித்தனர். நம்மிடம் பணமும் கிடையாது. குடும்பத்தின் தலைவர் சுதேசி என்ற காரணத்தினால், உத்தியோகம் வகித்து நல்ல அந்தஸ்திலிருப்போர் நம்மிடம் சம்பந்தம் செய்யப் பயப்படுவார்கள். எப்படிக் கல்யாணம் செய்வது? மாமாவும் எனது சிற்றப்பாவும் எவ்விதமும் கல்யாணத்தை முடித்து விடத் தீவிரமாக முயன்றனர். தந்தையாரோ துளிகூட அதில் சிரத்தையின்றி "நமது பெண்ணை ஜெர்மனி ராஜகுமாரன் வலிய வந்து மணந்துகொள்வான். காதல் மணம் தான் சிறந்தது. நான் என் பெண்ணை யாரையும் கல்யாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்த மாட்டேன். இப்போது அவசரப்பட்டுக் கல்யாணமே செய்ய வேண்டாம். அவளே வரன் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றார். இப்படிச் சொல்லிவிட்டு பாபநாசம் சென்றுவிட்டார் இயற்கை யின்பம் அனுபவிக்க. தாயார் என்ன செய்வார்? தந்தை இப்படி ஊராருடன் சேராமல் இருப்பது ஒன்று. கல்யாணம் செய்யாவிட்டால் ஊரிலேயே குடியிருக்க முடியாதே என்பதொன்று. செய்யும் வகையறியாமல் தவிக்க

வேண்டியதாயிற்று. கடைசியில் எங்கள் உறவினரில் ஒரு வரனைத் திர்மானித்தார்கள். சிற்றப்பா, என் தாயாரிடத்தில் நின்று மிகவும் விநயத்தோடும், துயரத்தோடும், "மன்னி! பெரியவிடங்களுக்குப் போனால் சிரமம் அதிகமாகும். அண்ணாவும் இதில் கொஞ்சமும் சிரத்தை யில்லாதிருக்கிறார். நமது பந்துக்களானால் நாம் செய்வதைத் திருப்தியாக வாங்கிக் கொள்வார்கள். பையனும் நம்மிடம் அன்பாயிருப்பான். உனக்கு ஒரு பிள்ளையைப் போலிருப்பான்" என்றார்.

"நான் சம்மதிக்கிறேன். உங்கள் அண்ணாவை எப்படித் திருப்திப் படுத்துவது" என்றார் தாயார். "அதெல்லாம் என் பொறுப்பு" என்றார் சிறிய தகப்பனார். மாப்பிள்ளையை வரவழைத் தாயிற்று. "தந்தையாரிடம் மாப்பிள்ளையைக் கொண்டு காண்பிக்கவேண்டுமே; அவர் கோபித்தாலென்ன செய்வது" என்ற கவலை எல்லாரையும் வாட்டியது.

தந்தையார் துருக்கி சுல்தானைப் போன்ற அலங்காரங்களுடன் தடபுடலாக அவர் வசித்த வீட்டு வாயிலில் அமர்ந்திருந்தார். சிறிய தகப்பனார் மெதுவாகத் தயங்கித் தயங்கி அண்ணனெதிரே சென்றார். "தம்பி என்ன சமாசாரம்". "ஒன்றுமில்லை,...... மாப்பிள்ளை.........வந்திருக்கார்..........உங்களிடம் அழைத்துக்கொண்டு வரலாமோ......என்று பார்க்கிறேன்." "எந்த மாப்பிள்ளை?". "நம்ம தங்கம் மாளுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை". கடகட வெனச் சிரித்தார் தந்தை.

"என்னப்பா, நம்ம மாப்பிள்ளையை நம்மிடம் அழைத்துக் கொண்டுவர என்ன பயம் உனக்கு?"

"பையன் என்கூட வாசித்தவன்; என் நண்பன். இப்போது உத்யோகத்திலிருக்கிறுன். சம்பளம் எழுபத்தைந்து". "அதெல்லாம் சரி. கண்ணுடி போட்டிருக்கிருனு?"

"இல்லே"

"முதுகு கூனலுண்டா"

"இல்லே"

"சரி. அழைத்துக்கொண்டுவா"

சித்தப்பா இந்தவிதமான பதிலே எதிர்பார்க்க வில்லே. அநுகூலமான பதிலேக் கேட்டு சந்தோஷத் தோடு மாப்பிள்ளேயை அழைத்துச் சென்ருர். கல்யாணம் நிச்சயமாயிற்று. தந்தையார் மதுரைக்குப் போய் விட்டார். அவருக்கு, இதில் பிரியமில்லாததனுலேயே போய்விட்டார் போலும் என்று நினைத்தோம். சொல்லொணு வருத்தம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டது. கல்யாணத்திற்கு வருவாரோ மாட்டாரோ? இனி கல்யாணத்தை நிறுத்துவதும் சாத்தியமில்லே. நாங்கள் புழுவாய்த் துடித்தோம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களே எழுது வதும், சொல்லுவதும் சாத்யமில்லாத காரியம். அனுபவித்தவர்களுக்கே தெரியும். கல்யாணத்திற்கு முதல்நாள் வாயிலில் வண்டி வந்து நின்றது. சம்பந்திப்பேர்கள் யாராவது வந்திருக்கலாம் என்று நினேத்தோம்; தந்தையார் உள்ளே வந்தார்! சிறிய தகப்பனுர் தயக்கத்தோடு "அண்ணு முகூர்த்தம் நாளேக்கு. கன்னிகாதானம் செய்ய வேண்டும்.

உங்களால் முடியுமா?'' என்றார். "நல்ல கேள்வி கேட்டாய் தம்பி. என் குழந்தையைக் கன்னிகா தானம் செய்துகொடுக்க யார் வருவார்கள்? நானே செய்கிறேன்'' என்றார். சிறிய தகப்பனார் மட்டுக் கடங்காத மகிழ்ச்சி கொண்டார். மற்றவர் இன்பத் திற்காகத் தனதின்பத்தைத் துறப்பவனே ஞானி. அத்தகைய துறவியே—தந்தை பாரதியார்.

"கன்னி சென்றாள்; மங்கை வந்தாள்.''

முற்றும்